விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 06 புதன்கிழமை (20.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 091

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## ஜெனிவா பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ள அரச தரப்பினர் வியூகம்

(கொழும்பு)
இலங்கை தொடர்பாக பிரிட்டன், ஜேர்மன் ஆகிய நாடுகளினால் ஜெனிவா மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை திருத்துவதற்கான முயற்சிகளை ஜெனிவாவில் களமிறங்கியுள்ள அரச தரப்பு பிரதிநிதிகள் முன்னெடுத்துள்ளனர்.

ஜெனிவா சென்றுள்ள அரச தரப்பு பிரதிநிதிகளான வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, வடக்கு ஆளுநர் 23☛

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி கிழக்கில் மக்கள் எழுச்சிப்பேரணி

(ஏறாவூர்)
தமிழின அழிப்புக்கு சர்வதேச விசாரணையே வேண்டும், ஐ.நா. மனித உரிமைகள்சபையில்இலங்கை அரசுக்கு மீளவும் கால அவகாசம் வழங்கக் கூடாது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை கிழக் 23☛



# ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைப் பிரேரணை தொடர்பில் இன்று விவாதம்

## நாளை வாக்கெடுப்பு நடத்தப்படும்

(ஜெனிவா) பிரித்தானியா, ஜேர்மன் உள்ளிட்ட நாடுகளின் அனுசரணையுடன் இலங்கை தொடர்பில் தயாரிக்கப்பட்ட பிரேரணை இன்று ஜெனிவாவில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. நாளைய தினம் குறித்த பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொடவிடம் நேற்றும் விசாரணை

(கொழும்பு)
கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட சுமார் நான்கு மணி நேர விசாரணைகளின் பின்னர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து 04☛

## நெடுந்தீவில் காற்றாலை

அமைச்சர் ரவி கருணாநாயக்க
(கொழும்பு)
நெடுந்தீவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு அந்தப் பிரதேச மக்களின் மின் தேவை நிறைவு செய்யப்படும் என்று மின்வலு மற்றும் சக்தி வளத்துறை அமைச்சர் 23☛

## தமிழ்க் கட்சிகள் ஜெனிவாவில் ஓரணியாக செயற்பட இணக்கம்

(கொழும்பு)
பாதிக்கப்பட்ட மக்களின் விவகாரம் இம்முறை ஜெனிவா மனித உரிமை பேரவையில் தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ள நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு அணியாக செயற்படுவதற்கு இணக்கம் கண்டுள்ளனர்.

அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரெலோ மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதி நிதிகள் தற்போது ஜெனிவாவில் களமிறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி தொடர்பில் 23☛

## தமிழ் மக்களின் கோரிக்கையை சர்வதேசம் இனிமேலும் அலட்சியப்படுத்த முடியாது



### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)
தமிழ் மக்களின் போராட்ட கோரிக்கைளை சர்வதேச சமூகம் இனிமேலும் அலட்சியப்படுத்த முடியாது என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் நடந்த மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் வட மாகாண முதலமைச்சரும் தமிழ் 23☛

## இணை அனுசரணையிலிருந்து இலங்கையை விலகவிடக் கூடாது

### ஐ.நா. உயர்ஸ்தானிகருடனான சந்திப்பில் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)
இலங்கை விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இந்த சந்திப்பின்போது இணை அனுசரணை வழங்கும் செயற்பாட்டில் இருந்து இலங்கையை 23☛

## சர்வதேச நீதிமன்றில் இலங்கையை முன்னிறுத்துக

### ஐ.நா வில் மகஜர் கையளிப்பு

(கொழும்பு)
இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த மூன்று விடயங்கள் உள்ளடங்கிய ஆறு தமிழ் 23☛

## வடக்கின் சாதிப்பிரச்சினையே அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை

### ஜனாதிபதி மைத்திரி அதிரடிப் பேச்சு

(கொழும்பு)
வடக்கில் சாதிப் பிரச்சினை தலைவிரித்தாடும் காரணத்தினால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 23☛

## வடக்கில் குழப்பமான கதவடைப்பு

### கிளிநொச்சி, மன்னார் முடக்கம் முல்லை, வவுனியா வழமைபோல

### யாழில் அரைகுறையாக நடைபெற்றது


(யாழ்ப்பாணம்)
வடக்கில் நேற்று குழப்பமான கதவடைப்பு போராட்டம் நடைபெற்றது. கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்கள் முடக்க நிலையில் காணப்பட்டதோடு முல்லைத்தீவு 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CA | THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# யாழ்ப்பாணத்தில் கணக்கியல், கணக்காய்வு மற்றும் வரி தொடர்பான அண்மைக்கால மாற்றங்கள் பற்றிய கருத்தரங்கு- மொழிமூலம்- ஆங்கிலம் (Medium-English)




கணக்கியல், கணக்காய்வு மற்றும் வரி தொடர்பில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கவனத்திற் கொண்டு, இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இரு நாள் கருத்தரங்கினை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துள்ளது. இதில் பங்குபற்றுபவர்கள் தமது அறிவை அதிகரித்து தமது பணிகளின் தரத்தினை மேம்படுத்த இது உதவும்.

| அமர்வு | அடக்கப்படும் பகுதிகள் | வளவாளர் |
|---|---|---|
| நாள் 1<br>2 ஏப்ரல் 2019 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மற்றும் சிறிய உரிமங்களுக்கான இலங்கை நிதியறிக்கையிடல் நியமங்கள்<br>SLFRS for SMEs and Smaller entities | திரு உபேந்திர விஜேசிங்ஹ<br>CEO Excellent Business School<br>Managing Partner W & J Associates |
| | கணக்காய்வு அபிப்பிராயம் உட்பட, இலங்கை கணக்காய்வு நியமம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மைகள் அல்லாத உரிமங்களின் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் மேலோட்டம்.<br>General Overview of SLAuS and SLAuS for Non SBE including audit opinion. | திரு சமன் ராஜபுத்திர<br>CEO, Green House Group of companies |
| நாள் 2<br>3 ஏப்ரல் 2019 | • வருமான வரிக்கான அறிமுகம்<br>• **2017 ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில்:**<br>தனிநபர், கம்பனி மற்றும் வதிவற்ற நபரின் வருமானவரிப் பரிப்பினை கணித்தல். வருமானவரிக் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய காலங்கள் வருமானவரித் திரட்டினை சமர்ப்பித்தல் | திருமதி ஹிரந்தி ரத்நாயக்க.<br>Retired Senior Consultant<br>Pricewaterhouse Coopers |
| | • பழைய மற்றும் புதிய வருமானவரிச் சட்ட ஏற்பாடுகளின் ஒப்பீடு (பிரதான ஏற்பாடுகள்)<br>• வரிக் கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய காலங்கள் மற்றும் திரட்டுக்கள் சமர்ப்பித்தல் அடங்கலாக, பிடித்துவைத்தல் வரி (WHT), தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT), பெறுமதிசேர்வரி (VAT), பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) பற்றிய சுருக்கமான அறிமுகம் | திரு வீரப்பன் சிவகுருநாதன்<br>Partner,<br>Consultants consortium |
| | **குழுவினர் கலந்தாய்வு:**<br>திருமதி ஹிரந்தி ரத்நாயக்க.<br>Retired Senior Consultant, Pricewaterhouse Coopers<br><br>திரு வீரப்பன் சிவகுருநாதன்<br>Partner, Consultants consortium | திரு பந்துல ஹப்புதந்திரிகே<br>Commissioner. Department of Inland Revenue. Jaffna<br><br>திரு. கந்தப்பு இளங்கோ<br>Managing Partner,<br>JA Partners, Jaffna. |

**பொருத்தமான பயன்பெறுனர்**

**கணக்கியல், கணக்காய்வு மற்றும் வரி தொடர்பில் அண்மைக்கால மாற்றங்கள் பற்றிய அறிவை மேம்படுத்த விரும்பும் நிதித்துறை சார்ந்தோர், கணக்காய்வாளர்கள், அகக் கணக்காய்வாளர்கள், வரி ஆலோசகர்கள், கணக்கியற்துறை மாணவர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தோர்.**

**இடம்**
Green Grass Hotel,
இல: 33, ஆசீர்வாதம் ஒழுங்கை.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**காலம்**
முற்பகல்: 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை
பதிவுகள்: மு.ப 8.30 தொடக்கம் மு.ப 9.00 வரை

CPD Accredited

பங்குபற்றுனருக்கு தொழில்சார் CPD கிடைக்கப்பெறும்.
பதிவுகள் முதல் வருகை முதற் பதிவு அடிப்படையில். 2019 மார்ச் 28ந் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பணம் செலுத்தி பதிவுசெய்து கொள்ளவும்.

(7984)

உங்கள் முதலீடு:

| திகதி | அமர்வு | மாணவர் | CA அங்கத்தினர் | ஏனையோர் |
|---|---|---|---|---|
| **02.04.2019**<br>**நாள் 1** | காலை **அல்லது** பிற்பகல் அமர்வில் கலந்துகொள்ள | ரூபா 700/- | ரூபா 2,000/- | ரூபா 2,800/- |
| | காலை மற்றும் பிற்பகல் அமர்வுகள் இரண்டிற்கும் (மதிய உணவு உட்பட) | ரூபா 1,000/- | ரூபா 3,000/- | ரூபா 4,000/- |
| **03.04.2019**<br>**நாள் 2** | காலை **அல்லது** பிற்பகல் அமர்வில் கலந்துகொள்ள | ரூபா 1,200/- | ரூபா 2,500/- | ரூபா 3,000/- |
| | காலை மற்றும் பிற்பகல் அமர்வுகள் இரண்டிற்கும் (மதிய உணவு உட்பட) | ரூபா 2,000/- | ரூபா 4,000/- | ரூபா 5,000/- |
| **இரண்டு நாட்களும் (மதிய உணவு உட்பட)** | | ரூபா 2,500/- | ரூபா 6,000/- | ரூபா 8,000/- |

பதிவு செய்வதற்கு தொடர்பு: அசீல்
தொலைபேசி: 011-2352008
Email: events@casrilanka.org

**The Institute of Chartered Accountants of Sri Lanka**
**30A, Malalasekera Mawatha, Colombo 07,**


**www.casrilanka.com**

பதிவு மற்றும் கொடுப்பனவு செய்யும் முறை
Online payments via www.casrilanka.com
அல்லது, கீழேயுள்ள வங்கிக் கணக்குக்கு வைப்புச் செய்து, வைப்புச் சிட்டையை கீழ்வரும் மின்னஞ்சல் அல்லது தொலைநகலுக்கு அனுப்பிவைக்கவும்.
Email :events@casrilanka.org , Fax - 011-2325060

வங்கிக் கணக்கு:
Ac Name: Institute of Chartered Accountants of Sri Lanka
Ac NO. 2323073
Bank/Branch: Bank of Ceylon, Independence Square Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீருடன் கல்லடி பாலத்தில் திரண்ட காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள்









(ஏறாவூர்)

தமது உறவுகள் தொடர்பில் உரிய பதிலை அரசாங்கம் வழங்குவதற்கு சர்வதேசம் அழுத்தங்களை வழங்க வேண்டும், என்பதை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்த்தாலும், கவனயீர்ப்பு பேரணியும் போராட்டமும் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த கவனயீர்ப்புப் பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளருமான சி.வி. விக்னேஸ்வரன், பொது அமைப்புக்களின், பிரதிநிதிகளீ ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திலிருந்து பல ஆயிரக்கணக்கான மக்கள், இளைஞர்கள் பல்வேறு கோரிக்கைகளை தாங்கியதாக பேரணி காந்தி பூங்கா வரையில் சென்றது.

காந்தி பூங்காவை பேரணி சென்றடைந்ததும் அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)



திருகோணமலையில் கடையடைப்பு

# கீரிமலை நகுலேஸ்வரபுரம் நிலம் சுவீகரிப்பு அநீதியான செயலாகும்

## உடன் தடுத்து நிறுத்த ஆறு.திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரபுரத்தில் சைவ மக்களின் நிலங்களை அரசு சுவீகரிக்க முயற்சி செய்வதும் ஆன்மீகச் சூழலை சுற்றுலா மையமாக அமைக்கத் திட்டமிட்டுள்ளமையும் அநீதியான செயல். இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவருமான கலாநிதி. ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளார்.



சரித்திர முக்கியத்துவம் மிக்க கீரிமலை நகுலேஸ்வரச் சூழலில் கீரிமலை காங்கேசன்துறை வீதியிலுள்ள கோவில்கள், தனியார் நிலங்கள், சமய நிறுவனங்களின் நிலங்களை கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்களிடம் ஒப்படைக்காத அரசாங்கம் தற்போது அப்பிரதேசத்தை சுவீகரிக்கத் திட்டமிடுவது மிக அநீதியான செயலாகும்.

சித்தர்களின் சமாதிகள் சடையம்மா மடம், கிருஷ்ணன் கோவில், சிவன் கோவில், பாதாள கங்கை தீர்த்த சேத்திரம், கதிரையாண்டவர் கோவில் உட்பட அப்பாவி மக்களின் நிலத்தை சுவீகரிக்கத் திட்டமிடுவது மிகத் துரோகமான செயலாகும். நீண்ட காலமாக வலி.வடக்கு மக்கள் இப்பகுதியை கையளிக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அரசு செய்யும் கைமாறு இது தானா? இவ்விடயம் தொடர்பாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்து கலாசார அமைச்சர் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்தல் அவசியமாகும். காங்கேசன் துறையில் ஹோட்டல் அமைத்து வாணிபம் செய்யும் அப்பாவி மக்களின் நிலங்கள் மற்றும் சுக்கிரவார திருகோண சத்திரம் அறக்கட்டளையின் 106 ஏக்கர் நிலம் யாவும் விரைவில் கையளிக்க வேண்டியது அரசின் கட்டாய கடனாகும் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்துச் செயற்பட வேண்டும் எனவும் மேலும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

யாழ்/ பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமானுடைய தேர் உற்சவம் நடைபெறுகின்றது

தேரேறி வருகின்ற முருகப் பெருந்தகையே!
வள்ளி மணவாளனே! தேவசேனாதிபதியே!
சூரனை வதைத்து தேவர்களைக் காத்த வேலவனே!
தீயவர்களை அகற்றி மீண்டும் நல்ல
யுகம் தோன்றி தமிழர்களுக்கு ஐக்கிய
இலங்கைக்குள் நல்ல ஒரு தீர்வைக்காண
அருள் தருவாயாக! வேண்டி நிற்கின்றேன்.

(C-5809)





ந.திரிலோகநாதன்
வலி.மேற்கு பிரதேச சபையின்
முன்னாள் தலைவர்
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன
முக்கியஸ்தர்,வலிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் இறுதிப் போட்டி!

## ஐ.பி.எல்., முழு அட்டவணை வெளியீடு

ஐ.பி.எல்., தொடருக்கான அட்டவணையை பி.சி.சி.ஐ., அறிவித்துள்ளது. இறுதிப் போட்டி சென்னையில் நடக்க உள்ளது.

கோடை காலத்தில் களைகட்டும் ஐ.பி.எல., தொடரின் 12வது 'சீசன்' வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கவுள்ள முதல் லீக் போட்டியில் சென்னை- பெங்களூரு அணிகள் மோதுகின்றன. இம்முறை இந்திய பாராளுமன்றத் தேர்தல் நடப்பதால், தொடரின் முதல் கட்ட அட்டவணை (17 போட்டி, மார்ச் 23-ஏப்ரல் 5) மட்டும் முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, அனைத்து லீக் போட்டிகளுக்கான திகதி, இடத்தை இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஆறு வாரத்தில் 56 லீக் போட்டிகள் நடக்கின்றன. மொததம் 12 போட்டிகள் மாலை 4 மணிக்கும் மீதமுள்ள போட்டிகள் இரவு 8 மணிக்கும் நடக்கும்.

'நொக் அவுட்' சுற்று விபரம் அறிவிக்கப்படவில்லை. இருப்பினும், மே 7ல் முதல் தகுதிச்சுற்று, மே 8ல் 'எலிமினேட்டர்', மே 10ல் இரண்டாவது தகுதிச்சுற்று, மே 12ல் சென்னையில் இறுதிப் போட்டி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கொல்கத்தா நிம்மதி**

இது குறித்து பி.சி.சி.ஐ., அதிகாரி ஒருவர கூறுகையில்,"மேற்குவங்கத்தில் 7 கட்டமாக பாராளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ளது. இதனால், கொல்கத்தா அணி சொந்த மண்ணில் பங்கேற்பதில் பிரச்சினை இருந்தது. மாநில அரசு, பொலிஸாருடன் பேசி அனைத்தும் போட்டிகளும் கொல்கத்தாவில் நடக்க அனுமதி பெற்றுள்ளோம்," என்றார்.


தில்லையம்பதியாள் துணை

**சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில்**
**ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி**
**அம்பாள் திருக்கோயில்**

உருவாகி பாரதத்தில் உவந்து கோண்டாவில் வந்தாய்
நூதன மூர்த்தி பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக முப்பது வருடபூர்த்தியை
முன்னிட்டு அன்னை சிவகாமிக்கு

**பங்குனி உத்தர மணவாளக்கோல சங்காபிஷேகம் - 2019**

**இராகம் - கல்யாணி**

ஆலரசு மரத்தின் அருள்மிகு
பொந்தினூடே
ஆனந்தக் கலசம் காட்டும்
அம்பிகே சிவகாமி
பாலாபிஷேகம் செய்தோம்
பங்குனித் திருநாளில்
பௌர்ணமித் திருவிளக்கின்
ஜோதியான கல்யாணி



**நாளை (21.03.2019) வியாழக்கிழமை**
**காலை 8.30 மணிக்கு**
**நவோத்திர சகஸ்ர 1008 சங்காபிஷேகம்,**
**நண்பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்)**

மாலை 5.30 மணிக்கு விசேட பூஜை, 6.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று மாலை 7.30 மணிக்கு ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ முருகப் பெருமான் பூந்தண்டிகையில் பெரிய தெருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.


(C-5825)

**உபயம்: அரச ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுவோரும்**

"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"

தில்லையம்பதி, கோண்டாவில். திருக்கோயில் பரிபாலன சபை


# மரண அறிவித்தல்



## நவரத்தினம் வேலும்மயிலும்

(ஓய்வுபெற்ற பதவி நிலை உத்தியோகத்தர் வவுனியா மற்றும் யாழ்.மாவட்ட செயலகம்)

"அப்பாவளவு" மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் பலாலி வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் வேலும்மயிலும் நேற்று *(19.03.2019)* செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - தங்கச்சியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற நாகநாதர் - புஷ்பகாந்தி அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் சேந்தனின் (விரிவுரையாளர் - ஆசிரிய கலாசாலை கோப்பாய்) அன்புத் தந்தையும் ராஜினியின் (ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி) அன்பு மாமனாரும் ஆதிரை, ஆவகன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அங்கயற்கரசி மற்றும் அன்னலட்சுமி, சிவசோதி மற்றும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான ஸ்ரீபுஷ்பநாதன் கமலேந்திரன் மற்றும் சாம்பசிவ மூர்த்தி, சத்திய சிவசொரூபினி மற்றும் காலஞ்சென்றவர்களான பால சுப்பிரமணியம் தர்மாவதி மற்றும் பத்மாவதி கௌசலாதேவி, சத்திய நாதன் மற்றும் காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(21.03.2019)* வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (8049)

'குருவருளகம்'
3 ஆவது ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.

தகவல்:-
குடும்பத்தினர்
0779773414, 0779710730

## கடற்படை...

வெளியேறியுள்ளார்.

அவர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 3ஆவது தடவையாகவும் முற்பகல் 9.30 மணியளவில் குற்ற புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதன் போது சுமார் 4 மணித்தியாலங் கள் அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன.

அதன் பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார். (ம-3)


**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து), மூளாய்**

**செயற்கை கருத்தரிப்பு மையம்**


எமது வைத்தியசாலையில்
குழந்தையின்மை
பிரச்சினைக்கு
அதிநவீன சிகிச்சை
முறையான
கருப்பையகமான
கருவூட்டல்
சிகிச்சை (IUI) வரும்
**21.03.2019**
ஆரம்பிக்கப்படவுள்ளது.
பயன்பெற விரும்புவோர்
பதிவுகளை மேற்கொள்ளவும்



(C-5821)

தொடர்புகளுக்கு:
**021 225 0474, 021 321 2533**
தலைவர்


# கண்ணீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபைத் தலைவர்
இ.வசந்தசேனன் (முன்னாள் நீதிபதி)
அவர்களின் அன்புச் சகோதரரும்
எனது நண்பனுமாகிய

## இராசேந்திரன் வசந்தகுமார்

*(முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர், நவாலி மகா வித்தியாலய ஓய்வுபெற்றஅதிபர், சமூக சேவையாளர்)*

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வி.தயாபரன் (பொருளாளர்) குடும்பத்தினர்**
**தயா அச்சகம் 92 (150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(8048)

# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் பணியாளர் **சிவபாஸ்கரன்** அவர்களின் அன்பு மாமியார்

## பற்றிமா லூர்து விமோறியஸ்

**(யாக்கோ மல்லிகா)**

அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

(C-5323)


**அத்தியாவசியக் கற்றல் பயிற்சி**

**முதன்நிலை ஒன்று**
(தரம் - 1, தரம் - 2 மாணவர்களுக்கு)

**முதன்நிலை இரண்டு**
(தரம் - 3, தரம் - 4 மாணவர்களுக்கு)

விலை 120/=

அனைத்து விடயங்களுடனும்
தெளிவான அச்சமைப்பு

(C-5818)

பாடசாலைகள் மொத்தமாக
பெற்றுக் கொள்ளலாம்

**யுனிலங்காஸ் பப்ளிகேஷன்**
இல.10-1/5, (342, Trust Complex, Sea Street)
முதலாம் மாடி, ஜிந்துபிட்டி வீதி, கொழும்பு - 13
தொ.பே. 077 625 8778


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி

படங்கள்: சிவசாந்தன்



சாவகச்சேரி

படங்கள்: சுபேசன், விஜயவாசன்

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு ஆதரவாக வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலும் கடைகளை மூடி வர்த்தகர்கள் ஆதரவளித்தனர்.**



சங்கானை

படம்: சரவணன்



பருத்தித்துறை



படங்கள்: மகாலிங்கம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புச்சொற்பொழிவு இன்று

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி மேற்கு அருள்மிகு ஸ்ரீ மாலை வைரவப் பெருமான் திருக்கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு இன்று காலை 8.30 மணியளவில் ஆலய பிரதான மண்டபத்தில் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர் சிவநெறிச்செம்மல் பொன் சந்திரவேல் "மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-7)

## சங்கத்தானை வீரகத்தி விநாயகர் சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சங்கத்தானை அருள்மிகு இத்தியடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன மஹா சம்புரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிமுதல் காலை 7.25 மணிவரை நடைபெறும்.

இதில் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (5)

## தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் LED பல்ப், LED பனல் பயிற்சிநெறிகள், தானியங்கி பாதுகாப்பு முறை, கண்காணிப்பு (CCTV) Camera பொருத்தும் பயிற்சிநெறி, கணனி வன்பொருள், கணனி வரைவியல் மற்றும் கணனி வலையமைப்பு, உணவு உற்பத்தி சார் பயிற்சிநெறி, வாழ்த்துமடல் மற்றும் கடதாசி வர்ண வேலைப்பாடு பயிற்சிநெறி, பனம் களி உலர்த்தல் ஆகிய பயிற்சி நெறிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளோர் பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 254 9876, 077 978 8730 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் பிரதி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5)

## செயற்பட்டு மகிழ்வோம்

காங்கேசன்துறை தையிட்டி கலாவல்லி முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அரசடி பிள்ளையார் கோவிலடியில் (முன்பள்ளி முன்பாக) முன்பள்ளி சனசமூக நிலையத் தலைவர் வ.பிரபாகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு தொழில் வழிகாட்டல் ஆலோசகர் ச.கிருபானந்தன், வலி.வடக்கு பிரதேச சபை செயலாளர் ஆர்.பகீர்தன், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் கிராம உத்தியோகத்தர் எஸ்.சுமந்திரன், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ச.செல்வரஞ்சனா ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## கல்வியங்காடு சந்தையின் புதிய கட்டடத்தொகுதி விரைவில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு சந்தைத் தொகுதியின் சகல வசதிகளுடன் கூடிய கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் காணப்படுகின்றது.

யாழ். கல்வியங்காடு சந்தை மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் காணப்பட்ட நிலையில் தற்போது மாடிக் கட்டடத்துடனான வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இச் சந்தைத் தொகுதியில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, கடைத் தொகுதி, மலசலகூடம், நீர்வசதி என்பவற்றுடன் விசாலமான முறையில் அமைக்கப்பட்டு வருகின்றது. (5-10-272)

## மாணவர் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் கடந்த 2018 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்ட தென்மராட்சிக் கல்வி வலய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கு.பிரணவராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட பிரதிச் செயலாளர் ராஜ்குமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (5-30)

## பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை உடன் நடத்த உறுப்பினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தினை உடனே நடத்துவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் சபையில் கோரிக்கை விடுத்துள்ளனர்.


அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து ஒரு வருடம் கடந்த நிலையில் இன்னமும் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடத்தப்படவில்லை.

ஒருங்கிணைப்புக் கூட்டம் வருடக்கணக்கில் இடம்பெறாமையால் எமது பிரச்சினைகளைத் தெரிவித்து அதற்கு ஒரு தீர்வு காண முடியாதுள்ளது.

அத்துடன் பல வேலைத்திட்டங்களுக்கான அனுமதிகள் பெறப்படாமல் இழுபறி நிலை காணப்படுகிறன. ஆகவே சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனே நடத்த வேண்டும் என சபையில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அத் தீர்மானத்தை தென்மராட்சி பிரதேச செயலருக்கு நகரசபை செயலாளர் ஊடாக அனுப்பி எமது பிரச்சினைகளை பிரதேச செயலகம் ஊடாகவே தீர்த்துக்கொள்ள முடியும் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (5-30)

## அத்துமீறி நுழைந்த கும்பலால் வீட்டுத்தளபாடமும் மதிலும் சேதம்



இரவு வேளை வீட்டுவளவினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டையும் தளபாடங்களையும் அடித்து நொருக்கியதுடன் புதிதாக அமைக்கப்பட்ட மதிலையும் இடித்து விழுத்தி தப்பியோடியுள்ளனர். இச்சம்பவம் கடந்த 17 ஆம் திகதி மீசாலை மேற்கு கார்த்திகேசு வீதியில் இடம்பெற்றது. குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கொடிகாமப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-10)

## இ.போ.ச.பேருந்து மீது கல்வீசித் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச.பேருந்து மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாத நபர்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த 786 வழி இலக்க முடைய குறித்த பேருந்தை ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் வைத்து இரு மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேரினால் வழிமறிக்கப்பட்டு கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச் சம்பவத்தில் பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி சேதமாக்கப்பட்டது. பயணிகளுக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் காரைநகர் இ.போ.ச. சாலையுடன் தொடர்பு கொண்ட போது குறித்த சம்பவம் தொடர்பாக மானிப்பாய்ப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர். (5-10)

## இராசி பலன்

**மீனம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.

**மேடம்:** சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், சுவாரஸ்யப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், சகோதர வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தினடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | செவ் | | ராகு |
| புத | இராசி பலன் | | |
| சுக் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம்- சதயம்<br>இரவு 9.10 மணிக்கு<br>கன்னி- சந் | | சந் |
| சனி, குரு, கேது | | | |

**20.03.2019**

பங்குனி 06, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

சதுர்த்தசி முற்பகல் 9.58 மணிவரை

பூரம் பிற்பகல் 3.51 மணிவரை

சுபநேரம் 4.48-6.18 மணிவரை

இராகுகாலம் 12.18-1.48 மணிவரை

பூரணை விரதம்

வளவன்

**கடகம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**சிம்மம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய நபர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**துலாம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கன்னி:** வரம் தரும் தெய்வங்களை வழிபடச்செல்ல வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உறவினர்கள் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான தீர்மானங்களே சுதந்திரக் கட்சியின் அழிவிற்கு காரணம் என்கிறது மகிந்த அணி



(கொழும்பு)

தவறான தீர்மானங்களே சுதந்திரக் கட்சியின் அழிவிற்கு காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இதனாலே பொதுஜன பெரமுனவிற்கு ஆதரவினை வழங்கினார்கள். இந்த வெற்றியினை எம்மால் தொடர்ந்து தனித்து முன்னெடுத்து செல்ல முடியும்.

ஆனால் தற்போது பொதுஜன பெரமுனவும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் பரந்துபட்ட கூட்டணியமைத்து ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக செயற்பட வேண்டும் என்று இரண்டு தரப்பு தலைமைத்துவமும் எதிர்பார்க்கின்றமையை மதிக்க வேண்டும்.

ஆனால் இதற்கு சுதந்திர கட்சியின் ஒரு தரப்பினர் தடைகளை ஏற்படுத்துகின்றார்கள். இன்று சுதந்திர கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் தற்காலிகமாகவே அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றார்கள்.

இவர்கள் தங்களின் அடுத்த அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள சுதந்திர கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்படுகின்றார்கள்' எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# வீதியைப் பாவனைக்கு விடுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் முதல் கட்டுவன் சந்திவரையான பாதையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த வீதிகளான கட்டுவன் மயிலிட்டி வீதி, பலாலி கடற்கரை வீதி மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்ட நிலையில் அரசியல்வாதிகள் ஏன் இவ் வீதியை திறக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கேள்வி எழுப்பியுள்ளனர்.

குறித்த வீதியில் ஸ்ரீ வேலுப்பிள்ளை ஆரம்பப்பாடசாலை அமைந்துள்ள போதும் பாரிய இடநெருக்கடியின் மத்தியில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் மைதானத்திலேயே தற்போது தற்காலிகமாக கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வீதி மயிலிட்டி புற்றுநோய் வைத்தியசாலைக்கு அனைத்து பாகங்களிலும் இருந்து வருகை தருவோர் பயன்படுத்தக்கூடிய வீதியாகக் காணப்படுவதால் குறித்த வீதியினை திறப்பதற்கு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-10)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1959 இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம் 3<br>கி.பா: 4 ¼<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில:A/L,சொந்ததொழில<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்,மணமகன் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/1072 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா: 55 ½ செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்,வெளிநாடு<br>தொ.இ: G/3042 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி 3<br>கி.பா: 10 ¼<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L,அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: A/L,அரசதொழில்<br>தொ.இ: B/1093 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:பூசம் 3<br>கி.பா: 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BAபட்டதாரி, அபிவிருத்திஉத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு அரசசொந்ததொழில் மனைவியை இழந்தவர்கள், திருமணமாகாதவர்கள், விவாகரத்தானவர்கள் விரும்பதக்கது<br>தொ.இ: G/3054 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி 2<br>கி.பா: 18 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L, Sales Ref<br>எதிர்பார்ப்பு:O/L,உள்நாடு<br>தொ.இ: B/1106 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 2<br>கி.பா: 12 ¼<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:B.Sc, MA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/3058 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 4<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L,அரசவாகனசாரதி<br>எதிர்பார்ப்பு: A/L, அரசதொழில்<br>தொ.இ: B/1107 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம் 1<br>கி.பா: 28செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:CBF,DBF, BBM Reading, Ass.Manager(Bank)<br>எதிர்பார்ப்பு: B.Scபட்டதாரி,உயர்தகமை<br>தொ.இ: G/3101 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# உலகத் தமிழர்களின் புனித தாயகம் திருவண்ணாமலை கிரிவலம் 20.03.2019

- நமசிவாய வாழ்க நாதன் தாள்
- அண்ணாமலையான் அடிக்கமலம்
- இராவணன் மேலது நீறு

புனிதத் தாயகமான திருவண்ணா மலையான் அடிக்கமலத்தையும் சிவபூமி வேந்தன் இராவணனது நெற்றியையும் நால்வர்கள் போற்றிப் பாடியிருக்கிறார்கள். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் சிதைந்து இருக்கிற ஆன்மீக உறவுப் பாலத்தை மீளக்கட்டி எழுப்பி முன்பிருந்தது போல் காசி,இராமேஸ்வரம், சிதம்பரம், வேதாரணியதலம், ஆகிய தலங்களினாலான உறவுகளைப் புதுப்பிக்க புனித தாயகத்தை தளமாகப் பயன்படுத்துவோம்.

- கிரிவலப் பாதையில் 100 சிவனடியார்களுக்கு மாதத்தில் ஒரு நாளாவது அன்னதானம் வழங்கி உறவுகளை மேம்படுத்த இருக்கின்றோம்.
- அன்னதானம் வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்

## நினைத்தாலே பேரின்ப பெருவாழ்வு




செயலாளர்
சைவப்பிரகாசப் பேரவை,
யாழ்ப்பாணம்.

(C-5810)

077 378 3316


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் நேற்றைய தினம் கடைப்பிடிக்கப்பட்டது. காலை முதல் மருந்தகங்கள், உணவகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. கிளிநொச்சி சேவை சந்தை தொகுதியும் மூடப்பட்டுள்ளமையால் வர்த்தக நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. இதனால் மக்கள் நடமாட்டமும் குறைவடைந்து காணப்பட்டது. அரச திணைக்களங்கள், பாடசாலைகள் வழமைபோன்று திறக்கப்பட்டு மாணவர்களின் வரவு மிகக்குறைவாகக் காணப்பட்டதால் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

# முழுநிலா நாள் கலைவிழா

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலை விழாவுக்கு கலையார்வம் மிக்க அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இந்நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 9.30. மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்குகொள்ளும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் கலை நிகழ்வுகள் அரங்கம் இடம்பெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளர் க.பத்மானந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக துணுக்காய் வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி திருமதி.மாதுகி கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அதிபர்களான த. அருமைநாயகம் (மு/பாண்டியன் குளம் ம.வி), இ.தங்கராசா (மு/ ஐயன்கன் குளம் ம.வி.), திருமதி.இ. தனபாக்கியம் (மு/துணுக்காய் அ.த.க .பாடசாலை) ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-15)

## வவுனியா சிறைச்சாலைக்கு அருகில்

# ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த நபர் கைதானார்

(குருமன்காடு)

வவுனியாவில் 3 கிராம் 910 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா சிறைச்சாலைக்கு அருகில் நேற்று முன்தினம் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையப் போதைத் தடுப்பு பிரிவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸ் பொறுப்பதிகாரி உசாந்த தலைமையிலான குழுவினர் குறித்த இளைஞனை சோதனை செய்த போதே அவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

சம்பவத்தில் வவுனியா தேக்கவத்தை, பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபர் மதில் ஊடாக சிறைச்சாலைக்குள் போதைப்பொருளை கடத்துவதற்காகவே நின்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய தொழில்களால் வாழ்வாதாரம் பாதிப்பு

## முல்லை.மீனவர்கள் கவலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் தொடர்ந்தும் வெளிமாவட்ட மீனவர்களின் தொழில்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக முல்லை. மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் சுமார் நாளாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவக்குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தப் பிரதேசங்களில் காலத்திற்குக்காலம் வெளிமாவட்ட மீனவர்களின் வருகையும் அவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற நிபந்தனை மீறிய தொழில்களாலும் தமது வாழ்வாதாரத்தொழில் முழுமையாகப் பாதிக் கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

முள்ளிவாய்க்கால், அம்பலவன் பொக்கணை, வலைஞர் மடம் போன்ற பகுதிகளில் வாழும் சுமார் 80 வீதமான குடும்பங்கள் கடற்றொழிலை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளதுடன், இப்பிரதேசத்தில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் கரையோரப் பிரதேசங்களில் கிடைக்கின்ற தொழில் வாய்ப்பை வைத்தே தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர்.

மேற்படி சட்டவிரோத தொழில்களால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக பிரதேச மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)

# கொக்காவில் விபத்தில் விலங்கொன்று உயிரிழந்தது



(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொக்காவில் பகுதியில் ஏ-9 வீதியில் அண்மையில் வன விலங்கொன்று விபத்தில் உயிரிழந்துள்ளது.

குறித்த வன விலங்கு சிறுத்தையாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

நேற்றும் அப்பகுதியில் குறித்த விலங்கின் உடல் ஏ-9 வீதியில் காணப்பட்டுள்ளது. இவ் விலங்கு இரை தேடி வீதியின் மறுபக்கம் செல்ல முற்பட்டபோது விபத்து இடம்பெற்றிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

உயிரிழந்த விலங்கு சிறுத்தையின் உடலமைப்பைக் கொண்டுள்ளது. (2)

# வவுனிக்குளத்தின் நீர்ப்பாசனக்கால்வாய்கள், விவசாய வீதிகளை புனரமைக்குமாறு வேண்டுகோள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் நீர்ப்பாசன மற்றும் கழிவு வாய்க்கால்கள், விவசாய வீதிகள் என்பவற்றை புனரமைத்து தருமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனிக்குளத்தின் கீழ் ஆறாயிரத்து 60 ஏக்கர் நிலப்பரப்பில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத இருந்த குளத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த மீள்குடியேற்றத்தின் பின்னர் "முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்கின்ற கருத்திட்டத்தின் கீழ்" 600 மில்லியன் ரூபா செலவில் குளத்தின் புனரமைப்புப்பணிகளும் ஏனைய முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதான மற்றும் நீர்ப்பாசனக்கால்வாய்களும் புனரமைக்கப்பட்டன.

அத்துடன், செயலிழந்து காணப்பட்ட ஏற்று நீர்ப்பாசனத்திட்டங்களும் மீள்புனரமைப்பு செய்யப்பட்டன.

இதன்மூலம் 6 ஆயிரத்து 60 ஏக்கர் நெற்செய்கையும் ஆயிரத்து 325 ஏக்கர் மேட்டுநிலச் செய்கையும் மேற்கொள்ளக் கூடிய வகையில் குளம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும், இக்குளத்தின் கீழான பிரதான நீர் விநியோகவாய்க்கால்களின் சில பகுதிகள் கிளைவாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் புனரமைக்கப்படாது இருக்கின்றன.

எனவே இவற்றைப்புனரமைத்துத் தருமாறு இப்பகுதி விவசாயிகள், விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.(2-315)






கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிவநகர் கிராம மூத்தோர் சங்கத்தின் செயற்பாடுகளை மென்மேலும் வளர்ச்சியடையச் செய்யும் வகையில், இக்கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர் தேசத்தில் வசித்து வரும் இராசலிங்கம். புஸ்பராசாவால் 68 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 50 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்பட்டு சிவநகர் மூத்தோர் சங்க உப தலைவர் ச.முத்துராசாவிடம் அவரது தாயார் திருமதி.இ.பரமேஸ்வரி நேற்று முன்தினம் கையளித்தார். இந்நிகழ்வில் சிவநகர் மூத்தோர் சங்கத்தின் மூத்தோர்களும் பங்குபற்றி கதிரைகளைப் பெற்றுக்கொண்டனர். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# யோகபுர நாதர் ஆலய தேர்த்திருவிழா இன்று

(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி யோகாம்பிகை சமேத யோகபுர நாதர் ஆலய வருடாந்த பிரமோற்சவ தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

மல்லாவி யோகபுரம் பகுதியில் அமைந்துள்ள [illegible] யோகாம்பிகை சமேத யோகபுர நாதர் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பத்து நாட்கள் நடைபெறவுள்ள இவ் உற்சவத்தின் ஒன்பதாம் நாளான இன்று புதன்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளதுடன், நாளைய தினம் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள மிகவும்பழைமை வாய்ந்த இவ் ஆலய உற்சவத்தின் போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (2-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வெளிநாட்டிலிருந்து பசுக்கள் இறக்குமதி

# ஒப்பந்தத்தை இரத்துச் செய்தால் அரசுக்கு 810 மில்.டொலர் நட்டம்

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து 20 ஆயிரம் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்வது தொடர்பில் வெளிநாட்டு நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாயின் அரசாங்கம் 810 மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாகச் செலுத்த வேண்டியிருக்கும் என கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி,-நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ பொருளாதார அமைச்சராகவிருந்த காலப் பகுதியிலேயே பசுக்களை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், இவற்றை இறக்குமதி செய்ய முன்னர் பரீட்சார்த்த திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவில்லையென்றும் ஹரிசன் குற்றம்சாட்டினார்.

வாய்மூலவிடைக்காக ஐ.ம.சு.மு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் ஹரிசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டிலிருந்து பசு மாடுகளை இறக்குமதி செய்யும் வேலைத்



திட்டத்தின் கீழ் 8032 பசு மாடுகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 406 பசுமாடுகள் இறந்து அல்லது வளர்க்க முடியாத நிலைக்குச் சென்றுள்ளன. மாடுகளை இறக்குமதி செய்ய முன்னர் பரீட்சார்த்தமான திட்டமொன்றை முன்னெடுத்திருந்தால் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் ரிதியகம அரச பண்ணைக்காக 2489 பசு மாடுகள் முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்பட்டன. பசுவொன்று தலா 3032 அமெரிக்க டொலர் பெறுமதியானது. இதுவரை 5 ஆயிரம் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட கறவைப் பசுக்கள் தனியார் கால்நடை வளர்ப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. பசு மாடுகளை இறக்குமதி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டில் 992 மில்லியன் ரூபாவும் 2017 ஆம் ஆண்டில் 2317 மில்லியன் ரூபாவும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலதிக கேள்வியொன்றை எழுப்பிய தயாசிறி எம்.பி, பசு மாடொன்றில் 75 லீற்றர் பாலைக் கறக்கமுடியும் எனக்கூறியே வெளிநாட்டிலிருந்து பசுமாடுகளை இறக்குமதி செய்துள்ளனர். எனினும், இறக்குமதி செய்யப்பட்ட எந்தவொரு மாட்டிலிருந்தும் 10 லீற்றருக்கும் அதிகமாக பால் கறக்கப்படவில்லை. சராசரியாக 8 முதல் 9 லீற்றரே பெறப்படுகின்றன. அதுமாத்திரமன்றி 400 இற்கும் அதிகமான மாடுகள் உயிரிழந்துள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும். இதுதொடர்பான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய முடியாதா எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், மாடு இறக்குமதி தொடர்பில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை தற்பொழுது இரத்துச்செய்வதாயின் 810 மில்லியன் அமெரிக்க டொலர்களை குறித்த வெளிநாட்டு நிறுவனத்துக்கு நட்டஈடாக வழங்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தார். (இ-7)

# பட்டதாரிகள் 8500 பேருக்கு இவ்வருடம் ஆசிரியர் நியமனம்

## கல்வியமைச்சர் காரியவசம் தகவல்



(கொழும்பு)

பட்டதாரிகளுக்குஅரசதொழிலை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு 8500 பட்டதாரிகளை இவ்வருடத்தில் ஆசிரியராக நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகள் அதிகரித்துள்ளமை குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பட்டதாரிகளுக்கு அரச தொழில் வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 500 பேரை இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் காரியவசம் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தேசிய பாடசாலைகளுக்காக மேலும் 3500 ஆசிரியர்களை இணைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மடிக்கணனிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (இ-7)

# வெளிநாட்டில் பணியாற்றுகின்ற இலங்கையருக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப்பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள், தொலைத்தொடர்புகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, விளையாட்டு மற்றும் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு, தொழில் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அங்குள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும், தூதரகங்களில் வாக்களிப்பதற்கு இடமளிப்பது அரசியல் மயப்படுத்தப்பட்டதாக அமைந்துவிடும். யார் அரசாங்கம் அமைத்தாலும் அவர்களால்



நியமிக்கப்படும் தூதுவர்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படும். இருந்தபோதும் வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 32

## வெம்மை தணிக்குக வெய்யனே

சூரியப் பெருமானே வருக நிந்தன்
சுடர் மிகும் கதிர்களின்
வீரியம் தணித்துச் சுகம் தருக
விண்ணிருந்து உந்தன்
மாரி மகளை மண்ணகம் அனுப்பிடுக
மண் மணந்து எங்கள் நிலம்
வாரி வளம் கொழிக்க அருள் புரிக

சூத்திரக் கிணறு வைத்தே நீரிறைக்கும்
சூட்சுமம் கண்டவன் எங்கள் பாட்டன்
கல்லுப்பாறை கவிந்திருக்கும் நிலத்தை
ஆப்பிறுக்கிப்பிரிய வைத்து நீரூற்றைச்
சாத்தியமாக்கியவன் நமது பூட்டன்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் இன்று
பாத்திரம் நனைக்கக் கூட
பல மைல்கள் நடக்க வேண்டும்
என்றாயிற்று எம் நிலைமை

காடழித்தோம் வதனமுறும் வனப்போடு
கண் துஞ்சும் சூழல்தாயின் பசும்
வீடழித்தோம் ஆதலால் மழையின்றி
மப்பெறிக்கும் வானம் பார்த்துச் சாகின்றோம்
எம்மை மன்னித்தருள்க

பச்சை கட்டிய எங்களூரின் நிலமெல்லாம்
உன் தகிப்பால் வெய்யனே
கச்சையும் இன்றிக் காய்ந்து கிடக்கிறது ஐயனே
மழை தரும் மாரித்தாயே வருக
அழைக்கின்றோம் உம் பிள்ளைகள் நாம்
நீர் அள்ளிச் சொரிக உந்தனுக்கு
பொங்கி மடைபரவிக் கூத்திடுவோம்
குளிர்த்திவைப்போம் தீச்சட்டி ஏந்தி
உன்னைத் திருப்தி செய்வோம்
நிலம் கீறிப் பயிர் விளைக்கும் எம்மவர்
மனம் குளிர மழையாய்ப் பொழிக

தி.சாந்தகுமார்






பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) யாழ். கிளையின் தானியங்கி பணப் பரிவர்த்தனை (ATM) இயந்திரத் தொகுதியை நேற்று முன்தினம் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட முதல்வர் இயந்திரத் தொகுதியை திறந்து வைத்ததுடன், அங்கு நடைபெற்ற நிகழ்விலும் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பாடசாலைகளுக்கு ஆட்பதிவு திணைக்களத்தால் சுற்றுநிருபம்

இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளது என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கோரும் விசேட சுற்று நிருபம் ஒன்று, பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தகவல் தொழில்நுட்ப மற்றும் இயக்க செயற்பாட்டு ஆணையாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

இதனடிப்படையில் 3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகர்கள் இருவர் படுகொலை ஏழு பொலிஸ் அதிகாரிகள் கைது

(கொழும்பு)

ரத்கமவில் வர்த்தகர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென் மாகாண விசேட விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவர் உட்பட 7 பொலிஸ் அதிகாரிகளும் வன ஜீவராசிகள் அதிகாரி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் குறித்த 8 பேருக்கும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் அவர்கள் ஆஜராகிய சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

# தேரும் தீர்த்தமும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று 20 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9 மணியளவில் தேர்த் திருவிழாவும் நாளை முற்பகல் 11 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5)

# புதையல் தோண்ட முற்பட்ட 5 பேருக்கு விளக்கமறியல்

(கண்டாவளை)

வவுனியா பூம்புகார் சுடலைக்கு அருகில் புதையல் தோண்டுவதற்காக ஆயுதங்களுடன் நின்ற தென்னிலங்கையைச் சேர்ந்த 5 பேரை பொலிஸார் கடந்த 17 ஆம் திகதி கைது செய்தனர்.

இவர்கள் ஐவரையும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-315)



மன்னார் மறைமாவட்டத்தின் தாழ்வுபாடு பங்கு மக்களின் பாதுகாவலராம் புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை பங்கு தந்தை அருட்பணி பி.யேசுராஜ் அடிகளார் தலைமையில் வடமாகாணத்தின் அமலமரி தியாகிகள் சபையின் முன்னாள் முதல்வரும் தற்பொழுது இச் சபையின் மறை போதகரின் குழுத் தலைவருமான அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாருடன் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும் திருப்பலியில் கலந்துகொண்ட பக்தர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மன்னார் செய்தியாளர்)

# முன்பள்ளிகளின் செயற்பாடுகளை விரிவாக்க வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

## வடமாகாண ஆரம்பப்பிள்ளைப்பருவ முன்பள்ளிகளின் உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்.,மன்னார்.வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள முன்பள்ளிகளின் செயற்பாடுக்ளை விரிவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் ஆறுதல் நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ முன்பள்ளிகளின் உதவிப் பணிப்பாளர் சி.கனேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் 5 வலயங்களில் உள்ள முன்பள்ளிகளையும் மன்னார் மாவட்டத்தில் மடு, மாந்தை வலயங்களையும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு மற்றும் வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இத் திட்டத்தில் ஆசிரிய வளமுகாமைத்துவம், மாணவர்வள முகாமைத்துவம் மற்றும் பௌதீக வள அபிவிருத்தி ஆகியவற்றை முதன்மைப்படுத்தி "சொலிடர்" நிறுவனத்தின் அனுசரணையுடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-10)

# சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 100 ஆவது வருட நிறைவை முன்னிட்டு வவுனியா-யாழ்.நோக்கிய சைக்கிள் பவனி

(பூநகரி)

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (I.L.O நிறுவனம்) 100 வருட நிறைவை முன்னிட்டு இலங்கையின் வட பகுதியில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வவுனியா புளியங்குளத்தில் இருந்து சுமார் 100 இற்கு மேற்பட்ட வீர. வீராங்கனைகளைக் கொண்ட சைக்கிள் பவனி ஆரம்பமானது.

இதில் I.L.O நிறுவனத்தின் இலங்கை-மாலைதீவு நாடுகளுக்கான பணிப்பாளர் சிம்ரன் சிங் தலைமையில் சைக்கிள் பவனி ஆரம்பமானது.

இச் சைக்கிள் பவனியானது நெடுங்கேணி, புளியங்குளம், புதுக்குடியிருப்பு ஊடாக நேற்றுக்காலை முழங்காவிலை வந்தடைந்தது.

சைக்கிள் பவனி அணியுடன் முழங்காவிலிருந்து பலர் இணைந்து பூநகரி நகர் ஊடாக சங்குப்பிட்டி-கேரதீவுப் பாலத்தை வந்தடைந்தனர்.






அவர்களுடன் கடற்றொழிலாலர் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள் இணைந்து தனங்கிளப்பு, நாவற்குழியூடாக நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்.மாநகர சபை மைதானத்தை வந்தடைந்தனர். அங்கு பலதரப்பட்ட கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (2-84)

# இலங்கை விவகாரத்தை கண்காணிப்பதற்கு ஐ.நா. சிறப்பு நிபுணரை நியமிக்க வேண்டும்

## தமிழக சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலைமையைக் கண்டறிய, இலங்கைக்கு ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஒருவரை நியமிக்க வேண்டு மென தமிழக சட்டமன்ற உறுப்பினர் சே.கருணாஸ் தெரிவித்துள்ளார்.



ஜெனிவா மனித உரிமை பேரவையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இலங்கை விவகாரம் குறித்த விசேட உபகுழுக் கூட்டத்திலேயே சே.கருணாஸ் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை மற்றும் மனிதநேயச் சிக்கல்கள் ஆகியவற்றை கண்காணித்து ஆறு மாதத்துக்கொருமுறை அறிக்கையை சமர்ப்பிக்க சிறப்பு நிபுணரை நியமிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சர்வதேச விசாரணை, பொதுவாக்கெடுப்பு என்பவற்றின் ஊடாகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்க முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (2-7)

# மணவாளக் கோல விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி வீரகத்தி விநாயகர் மணவாளக்கோல விழாவும் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழாவும் நாளை 21 ஆம் திகதி வியாழக் கிழமை பங்குனி உத்தர நன்னாளில் நடைபெறும்.

இதில் முற்பகல் 10 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பிற்பகல் 4 மணியளவில் வசந்த மண்டபப் பூசை, திருவூஞ்சல் என்பன நடைபெறும். (5)

# மகளிர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுச் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையானது, சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் பெண்களின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் வீட்டிலிருந்தவாறே கைத்தொழில் செய்வதன் மூலம் வருமானம் ஈட்டிக் கொள்வதற்கான செயற்றிட்டங்களை முன்னகர்த்தி வருகின்றது.

அந்த வகையில் மகளிர் தினத்தை முன்னிட்டு கால் விளக்குமாறு, துடைப்பம், சிரட்டை அலங்காரப்பொருட்கள், தென்னோலையிலான கைவேலைகள் போன்ற பயிற்சிகளை முதற்கட்டமாக நல்லூர் பிரதேசத்திலுள்ள கற்பகதரு சங்கங்களிலுள்ள பெண்களுக்கு வழாங்கவுள்ளது.

இப்பயிற்சி நெறியானது எதிர் வரும் 22 ஆம் திகதி முற்பகல் 9.30 மணியளவில் திவ்விய ஜீவன மண்டபம் சட்டநாதர் கோவிலடி, நல்லூர் என்ற இடத்தில் தென்னைப்பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் த[illegible]மையில் நடைபெறவுள்ளது. (5-7)

# தென்னிலங்கையில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள இன்புளுவென்சா

(கொழும்பு)

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இன்புளுவென்சா நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக தென்மாகாண சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் காலி, கராப்பிட்டி, பலப்பிட்டி, எல்பிட்டி ஆகிய வைத்தியசாலைகளில் இன்புளுவென்சா நோய் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்நோயை தடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளமையை இனங்காணும் பொருட்டு மக்கள் அருகிலுள்ள வைத்தியசாலைச்க்கு சென்று, தங்களைப் பரிசோதனை செய்துகொள்வது சிறந்ததெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரிட்டன் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க

# ஐ.நாவில் அரசு எடுத்துள்ள தீர்மானம் இலங்கையை பாரியளவில் பாதிக்கும்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரித்தானியா, கனடா உள்ளிட்ட நாடுகள் இணைந்து கொண்டு வரும் பிரேரணைக்கு மீண்டும் இணை அனுசரணை வழங்க ரணில் அரசு எடுத்துள்ள தீர்மானம் இலங்கையை பாரிய அளவில் பாதிக்கும் என எச்சரித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இந்தப் பிரேரணையில் நாட்டின் பாதுகாப்பு குறித்தும் அரசியலமைப்பு குறித்தும் கலப்பு நீதிமன்றம் குறித்தும் பார தூரமான நிபந்தனைகள் உள்வாங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இவ்வாண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, தொழில் தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, தொலைத் தொடர்புகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார். (இ-7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தொழில்நுட்பபீடம் அறிவியல்நகர், கிளிநொச்சி

### இரண்டாம் வருட 2015/16 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட இரண்டாம் வருட 2015/16 கல்வியாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 25.03.2019 திங்கட்கிழமை மீளவும் ஆரம்பமாகும் என்பதனை அறியத் தருகின்றேன். விடுதி வசதிகள் 24.03.2019இல் இருந்து வழங்கப்படும்.

(C-5819) -பதிவாளர்

# 31ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1930 . 08 . 05



ஆண்டவன் மடியில் 2019 . 02 . 19

## அமரர் கந்தசாமி நவரத்தினம்

19.02.2019 அன்று சிவபதமடைந்த குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 21.03.2019 (வியாழக்கிழமை) காலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் சபிண்டீகரன நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தங்களை குடும்ப சகிதம் வந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீனாட்சி அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(C-5811)

குடும்பத்தினர்
(கருணன்) 075 289 4720

# ஆத்ம சாந்திக் கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண் மகிழ
19.08.1947

கண் நெகிழ
18.02.2019

## அமரர். சுப்பிரமணியம் பரமலிங்கம்

கடந்த 18.02.2019 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் சுப்பிரமணியம் பரமலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.03.2019) அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லையம்பதி,
துன்னாலை, கரவெட்டி.

(C 5816)

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



## அமரர். பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

(தர்மகர்த்தா திருவெண்காடு சித்தி விநாயகர் தேவஸ்தானம், மண்டைதீவு)

கடந்த 21.02.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்த **பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 21.03.2019 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணம் 23.03.2019 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

திருவெண்காடு,
மண்டைதீவு-06

(சி-5820)

குடும்பத்தினர்.
021 221 4630

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் இந்தியக் குடியுரிமை அளிக்கப்படும்

## தி.மு.க தேர்தல் அறிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை அளிக்கப்படும், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்களின் விடுதலைக்கு வலியுறுத்தப்படும்.

கல்வி மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரப்படும், நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை நேற்று செவ்வாய்க் கிழமை அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின், அண்ணா அறிவாலயத்தில் வெளியிட்டார்.

தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்களாவன,

❖ தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் தமிழிலேயே செயற்படத்தக்க வகையில், இணை ஆட்சி மொழியாக தமிழை அங்கீகரிக்க தேவையான சட்ட திருத்தங்கள் செய்யப்படும்.

❖ வேளாண் துறைக்கு தனியாக நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

❖ மத்திய அரசின் வரி வருவாயில் 60% மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

❖ வளர்ந்த மாநிலங்கள் மேலும் வளர்ச்சி அடைந்திட, மாநிலங்களின் செயற்றிறன் அடிப்படையிலும், பாரபட்சமில்லாமலும் நிதி பங்கீடு செய்யப்பட வேண்டும்.

❖ மத்திய நிதிக்குழுவின் அமைப்பும், பணிகளும், மாநிலங்களின் மன்றத்தால் வரையறுக்கப்பட வேண்டும்.

❖ மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்.

❖ தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் 1995-ன்படி, குறைந்தபட்சம் ரூ.8,000 ஆக நிர்ணயிக்கப்படும்.

❖ பா.ஜ.க அரசின் தவறான முடிவுகளால் சிதைந்துபோன இந்திய பொருளாதாரத்தை மீட்டெடுக்க சிறப்பு அந்தஸ்துடன் கூடிய பொருளாதார வல்லுநர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

❖ தனிநபர் வருமானம் ஆண்டுக்கு ரூ.1,50,000 ஆக உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ பெற்றோலிய எரிபொருட்களின் விலையைக் கட்டுக்குள் வைக்க நிர்ணயிக்கப்பட்ட விலை முறை மீண்டும் கொண்டு வரப்படும்.

❖ சமையல் எரிவாயு மானியத் தொகை வங்கிக்கணக்கில் திரும்ப செலுத்தப்படும் முறை மாற்றப்பட்டு முன்பிருந்தது போல சிலிண்டர் விலை குறைக்கப்படும்.

❖ தென்னிந்திய நதிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ நீட் தேர்வு ரத்து செய்யப்படும்.

❖ 1964 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை ஒப்பந்தம்படி இந்தியாவுக்குத் திரும்பி அகதிகள் முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் மேலும், தாமதமில்லாமல் இந்தியக் குடியுரிமை அளிக்கப்படும்.

❖ கஜா போன்ற கடும் நிவாரண நிதிகளுக்காக நிதிநிலை அறிக்கையில் அரை சதவீதம் நிதி ஒதுக்கப்படும்.

❖ புயல் பாதிப்புக்குள்ளாகும் அனைத்து பகுதிகளிலும் நிரந்தர பாதுகாப்பு இல்லங்கள் ஏற்படுத்தப் படும்.

❖ 100 நாள் வேலைவாய்ப்பில் விவசாயிகளுக்கு விவசாய பொருட்கள் இலவசமாக வழங்கப்படும். 100 நாட்கள் வேலை வாய்ப்பு என்பது 150-ஆக உயர்த்தப்படும்.

❖ பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர் விடுதலைக்காக வலியுறுத்தல்

❖ மனித கடத்தலை தடுக்க புதிய சட்டம்

❖ பட்டாசு தொழிலை பாதுகாக்க நடவடிக்கை

❖ ஏழை விவசாய பொருளாதாரத்தை பாதுகாக்க இலவச மின்சாரம் என்பனவாகும். (7)

# நிரவ் மோடியைக் கைது செய்யுமாறு லண்டன் உயர்நீதிமன்றம் உத்தரவு

(லண்டன்)

தொழிலதிபர் நிரவ் மோடியை கைது செய்யுமாறு லண்டன் உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்திய வங்கியில் கடன் மோசடியில் ஈடுபட்டு வெளிநாட்டிற்கு தப்பிச்சென்றுள்ள அவரை நாடு கடத்தி இந்தியாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அமுலாக்கத்துறை அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

குறித்த கோரிக்கைக்கு இணங்க லண்டன் நீதிமன்றம் தற்பொழுது இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தியாவின் பஞ்சாப் நஷனல் வங்கியில் சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் கடன்மோசடியில் ஈடுபட்ட அவர் தற்பொழுது லண்டனில் தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# கோவா முதல்வராக பிரமோத் பதவியேற்பு




(பனாஜி)

மனோகர் பாரிக்கர் மறைவை தொடர்ந்து கோவாவின் புதிய முதல்வராக பிரமோத் சாவந்த் பதவியேற்றுக் கொண்டார். புதிய முதல்வராக பிரமோத் சாவந்த் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணியளவில் பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு கோவா ஆளுநர் மிருதுளா சின்ஹா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பா.ஜ.க தலைவர் அமித்ஷா தலைமையில் புதிய முதல்வரை தேர்வு செய்வதற்கான கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. அந்த கூட்டத்தில் கோவா புதிய முதல்வராக பிரமோத் சாவந்த் தேர்வு செய்யப்பட்டார்.

முன்னாள் இராணுவ அமைச்சரும் கோவா முதல்வராக இருந்த மனோகர் பாரிக்கர் உடல் நலக்குறைவால் நேற்று முந்தினம் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# மொசாம்பிக்கில் இட

# ஆயிரம் பேர் உயி

## பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்



(மபுடா)

**ஆபிரிக்க நாடான மொசாம்பிக்கில் வீசிய இடாய் சூறாவளியில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்ந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாக மொசாம்பிக் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

இடாய் சூறாவளியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஹெலிகொப்டரில் சென்று பார்வையிட்ட பின்னரே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நதிகளில் சடலங்கள் மிதப்பதை காணக்கூடியதாக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பெய்ரா துறைமுக நகரை 177 கிலோ

# இந்தோனேசியாவில்

# பலி எண்ணிக்கை 8



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் பபுவா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கில் சிக்
பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உயர்
ப்பட்டு வரும் நிலையில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூ
வருவதாகவும், 150 இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையி
இதேவேளை, அண்மைக்காலமாகவே இந்தோனேசியாவில் ஏற்படும் இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாய் சூறாவளியால்

# ரிழந்திருக்கலாம்

## ார்வையிட்ட ஜனாதிபதி அச்சம்





மீற்றர் வேகத்தில் கடந்த வியாழக்கி ழமை சூறாவளி தாக்கியது. ஆனால், நிவாரணக் குழுவினர் ஞாயிற்றுக்கிழ மையே பாதிக்கப்பட்ட பகுதியை அணு கியுள்ளனர்.

சுமார் 5 இலட்சம் மக்கள் வசிக்கும் பெய்ரா நகரம் பாரிய ளவில் சேதமடைந்துள்ளதாக ஐ.நா. நிவாரண பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (7)

# கொங்கோவில் ரயில் விபத்து குழந்தைகள் உட்பட 25 பேர் பலி

## 20 இற்கு மேற்பட்டோர் படுகாயம்



(பிராஸாவில்லி)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஏற்பட்ட ரயில் விபத்தில், 25 பேர் பலியாகினர். 20க்கும் மேற்பட்டவர்கள் காயம டைந்தனர்.

இதுகுறித்து கொங்கோ ரயில்வே துறை, "காசை மாகா ணத்தில் உள்ள பினாலேகாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ரயில் விபத் தில் 25 பேர் பலியாகினர். பலியா னவர்களில் பெரும்பாலானவர் கள் சிறுவர்கள்.

20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ளது.

ரயிலில் விபத்து ஏற்பட்டதற் கான காரணம் குறித்து விசா ரணை நடத்தப்பட்டு வருவதாக கொங்கோ அரச தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கொங்கோவில் ஏற்பட்ட மூன்றா வது ரயில் விபத்து இதுவாகும். கட ந்த மாதம் கேலண்டாவில் ஏற்ப ட்ட ரயில் விபத்தில் 5 பேர் பலி யாகினர் என்பது குறிப்பிடத்தக் கது. (7)

# மசூதிகளில் மக்களைக் கொன்றவன் பெயரை உச்சரிக்கமாட்டேன்-ஜெசிந்தா

(வெலிங்டன்)

மசூதிகளில் பயங்கரவாத தாக் குதலை நடத்திய பயங்கரவாதி யின் பெயரை உச்சரிக்க மாட்டேன் என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா கூறியுள்ளார்.

நியூசிலாந்தின் முக்கிய நகர ங்களில் ஒன்றான கிறிஸ்ட்சர்ச் நக ரில் உள்ள 2 மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகை நடை பெற்றபோது, மர்ம நபர்கள் திடீரென புகுந்து துப்பாக்கியால் சுட்டு தாக் குதல் நடத்தினர்.

இதில், 50 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயங்களு டன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலையடுத்து நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த விவகா ரம் தொடர்பாக ஆலோசிப்பதற் காக பிரதமர் ஜெசிந்தா தலைமை யில் சிறப்பு பாராளுமன்ற கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் தொடக் கத்திலேயே, அரபு மொழியில் வண க்கம் கூறிவிட்டு ஜெசிந்தா உரை யாற்ற ஆரம்பித்தார். இதில் அவர் உரையாற்றியதாவது,

பயங்கரவாத நடவடிக்கையால் பல உயிர்களை பலி வாங்கி உள் ளான். அதனால் அவனது பெயரை கேட்கக்கூட விரும்பவில்லை. இந்த தாக்குதலில் உயிரிழந்தவர் களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக எம்.பிக்கள் பணியாற்று வார்கள். சட்டம் முழு வீச்சில் அவன் மீது பாயும்.

அவன் ஒரு பயங்கரவாதி, குற்றவாளி. ஒருபோதும் அவனது பெயரை நான் உச்சரிக்க மாட்டேன். நீங்களும் அவனது பெயரை உச் சரிப்பதை விடுத்து, அவனால் பாதி க்கப்பட்டவர்கள் குறித்து பேசுங் கள்என அனைவரிடத்திலும்வேண் டுகோள் விடுக்கிறேன். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற அமை ச்சரவைக் கூட்டத்தில், நியூசிலா ந்து சட்டப்படி ஒருவர் 16 வயதிலேயே சாதாரண துப்பாக்கியையும், 18 வயதில் தானியங்கி துப்பாக்கி யையும் வாங்க முடியும்.

எனவே, நாட்டில் நடைமு றையில் இருக்கும் துப்பாக்கி சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து 10 நாட்களுக்குள் துப்பாக்கி சட்டத் தில் திருத்தம் கொண்டுவர முடி வெடுக்கப்படும் என பிரதமர் ஜெசி ந்தா தெரிவித்துள்ளது குறிப்பி டத்தக்கது. (7)

# வெள்ளப்பெருக்கு

# 30ஆக அதிகரிப்பு !



ம் சிக்குண்டு 80 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன், 60 இற்கும் மேற்
உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார். மீட்புப் பணிகள் முன்னெடுக்க
க்கூடும் என அஞ்சப்படுகின்றது. தொடர்ச்சியாக மீட்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு
கையில் ஈடுபட்டு வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
கை அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

## நியூசிலாந்தில் துப்பாக்கிச்சூடு

# ஹிஜாப் அணிந்து மசூதிக்குச் சென்ற பிரதமர் ஜெசிந்தா



(வெலிங்டன்)

நியூசிலாந்தின் கிறிஸ்ட்சர்ச் நகரில் இரண்டு பள்ளிவாசல்க ளின் மீது கடந்த வெள்ளிக்கி ழமை மேற்கொள்ளப்பட பயங்கர வாதத் தாக்குதலில் 50 பேர் கொல லப்பட்டதுடன், இன்னும் பலர் வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற னர்.

இந்நிலையில் நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா அடெர்ன் முஸ் லிம் பெண்கள் அணிகின்ற ஹிஜாப் அணிந்து, தாக்குதல் நடத்தப்பட்ட கிரி ஸ்ட்சர்ச் நகர பள்ளிவாசலுக்குச் சென்று தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர் களைச் சந்தித்திருந்தார். அச்சந்திப் பின் போது கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுடன் பிரதமர் ஜெசிந்தா உரையாடிய விதம், தன்னுடைய ஆதரவை வெளிப்படுத்திய முறை என்பன தொடர்பில் சமூகவலைத் தளங்களில் பலதரப்பினரிடமிருந் தும் பாராட்டுக்கள் குவிகின்றன.

இந்நிலையில் காணாமல் போனோர் அலுவலகத்தின் தவிசா ளர் சாலிய பீரிஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் இவ்விடயம் தொடர் பில் வெளியிட்டுள்ள பதிவில்,

நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா அடெர்ன் ஹிஜாப் அணிந்து கிறிஸ் ட்சர்ச் நகர் பள்ளி வாசலுக்குச் சென் றிருக்கின்றார். தலைமைத்துவம் எனப்படுவது, மக்கள் மத்தியில் சென்று இழைந்த தீவிரவாதத்திற்கு எதி ரான வலுவாக கருத்தினை அவர் களிடம் புகுத்தி, அவர்களுடன் கைகோர்த்து ஆதரவாக நிற்பதாகும். அதுவே சிறந்த தலைமைத்துவம் என்று குறிப்பிட்டுள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் மைத்திரி இறுக்கம்

# அர்ஜூன் மகேந்திரனை இலங்கையிடம் சிங்கப்பூர் அரசு ஒப்படைக்க வேண்டும்

## இலஞ்ச ஊழலை ஒழிக்கும் ஐந்தாண்டு திட்ட வெளியீட்டு நிகழ்வில் ஜனாதிபதி வலியுறுத்து



இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய முக்கிய நபரை (அர்ஜுன் மகேந்திரனை) இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது சம்பந்தமான தனது கொள்கை பற்றிய தெளிவான கூற்றை சிங்கப்பூர் அரசாங்கம் வெளியிட வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். தான் அதுபற்றி சிங்கப்பூர் பிரதமருடன் கலந்துரையாடியதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலஞ்சம், ஊழலை ஒழிக்கும் ஐந்தாண்டு செயற்றிட்டத்தை வெளியிட்டு வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி 62 இலட்சத்து 50 ஆயிரம் மக்களின் வாக்குகளின் மூலம் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய விடயமாக அமைந்திருந்தது ஊழல், மோசடிகளை ஒழிப்பதாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்காக கடந்த நான்கு வருட காலப்பகுதியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவற்றில் எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாத பல்வேறு தீர்மானங்கள் அடங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வரலாற்றில் இடம்பெற்ற பாரிய கொள்ளையான மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக கண்டறிவதற்கு தான் நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவானது ஆணைக்குழுக்கள் பற்றி அதுவரையில் மக்கள் மத்தியில் இருந்து வந்த நம்பிக்கையீனம் மற்றும் பின்னடைவான கருத்துக்களை மாற்றியமைத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த விசாரணையை மேற்கொண்டுவரும் அதிகாரிகள் பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி, சிலவேளைகளில் அவர்களுக்கெதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அதனை அரச நிர்வாகத்தில் இடம்பெற்ற பலவீனமான நிகழ்வாகதான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

நல்லாட்சி எண்ணக்கருவினுள் ஒரு நாடு என்ற வகையில் முன்னேறிச் செல்வதற்குள்ள முக்கிய சவாலாக ஊழல், மோசடிகள் இருக்குமானால் அதனை ஒழிப்பதற்கு நாட்டை நேசிக்கின்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதிகாரத்தை பாதுகாப்பதன்றி நாட்டின் உண்மையான நிலைமை பற்றிப் பேசி அவற்றிற்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எவரும் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் அத்தகைய நிலைமையில் எவரும் இதுபற்றி வெளிப்படையாகப் பேசுவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலஞ்சம், ஊழலை ஒழிப்பதற்கு தெளிவான நிகழ்ச்சித்திட்டமொன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பிரச்சினை உள்ளதாகவும் சிறந்த அரச சேவையின் மூலம் இலஞ்சம், ஊழல் இல்லாத சிறந்ததோர் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஊழல், மோசடிகளுக்கு எதிராக தண்டனை வழங்குதல் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இலஞ்சம், ஊழலை ஒழிக்கும் ஐந்தாண்டு செயற்றிட்டம் இதன் போது இலஞ்சம், ஊழல்விசாரணை ஆணைக்குழுவின் தலைவரால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையில்இலஞ்சம், ஊழலை இல்லாதொழித்து அதன் மூலம் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சுற்றாடல் ரீதியான பேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்துவது இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். சுமார் ஒரு வருட காலமாக இலஞ்சம், ஊழல் சட்டத்தில் இலஞ்சம், ஊழலுக்கான தண்டனைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு பலவீனமான சட்டதிட்டங்களுடன் தொடர்பான விடயங்கள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் திருத்தப்பட்டு அதற்கேற்ப இந்த புதிய திட்டங்கள் அடங்கிய ஐந்தாண்டு தேசிய செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து நிறுவனக் கட்டமைப்பிலும் ஊழலை ஒழித்தல், தண்டனை முறைமைகள் மற்றும் சட்ட கொள்கைகளை திருத்துதல் ஆகிய முக்கிய அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த தேசிய செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக சுமார் 40 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களின் கருத்துக்களை கவனத்திற் கொள்வதற்கு இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மூன்று நிக்காயாக்களின் சங்கைக்குரிய மகாசங்கத்தினர் உள்ளிட்ட சகல மதத் தலைவர்கள், சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய உள்ளிட்ட சட்டத்துறை முக்கியஸ்தர்களும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பீ டெப்லிட்டி, ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹானா சிங்கர் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரமுகர்களும் இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.(இ-7)

# நவீன பட்டுப்பாதையில் தோல்வியடைந்த திட்டமாக அம்பாந்தோட்டை துறைமுகம்

(கொழும்பு)

சீனாவின் ஒரு மண்டலம் - ஒரு பாதை (நவீன பட்டுப்பாதைத் திட்டம்) திட்டத்தின் கீழான ஒரு தோல்வியடைந்த செயற்றிட்டமாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் மாறியிருக்கின்றது என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட தேசிய பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒரு மண்டலம் - ஒரு பாதைத் திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகத்தை நிர்மாணித்ததில் இலங்கை மீது எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் அது முதலீடுகளில் இருந்து பலன்கள் எவற்றையும் தருவதற்கு தவறியமையேயாகும் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.(இ-9)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பிரம்ம ஞானம்

“நான் யார் என்பதை இந்த உலகத்திற்கு புரிய வைக்கப் போகிறேன்!” என்றார் ஒருத்தர் மிகவும் கோபமாக. அவருக்கு எல்லா வசதியும் இருந்தது. ஏராளமான நிலம், வீடு, வாசல் எதிலும் குறையில்லை! அப்படியிருந்தும் அவர் யார் என்பதை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவருடைய ஆசை! “ஏன் இப்படி கோபமாக இருக்கிறீர்கள் என்று அவரிடம் கேட்டாங்க! என்னுடைய தோட்டத்திலே அடுத்த தோட்டக்காரன் ஒரு அரை அடி வரப்பைத் தள்ளிப்போட்டு விட்டான். என்ன தைரியம் அவனுக்கு!” நியாயமாக அளந்து பார்த்தால் சரியாகப் போய்விடும். அதற்காக ஏன் அதைப் பெரிதுபடுத்துகிறீர்கள்! என மற்றவர்கள் யோசனை சொன்னார்கள். “அதெப்படி விட்டு விட முடியும். நான் யார் என்று அவனுக்குப் புரிய வேண்டாமா?” என்று துள்ளிக்குதித்தார். சரி அதற்கு இப்ப என்ன செய்யப் போகிறீர்கள் என்றார்கள். “நீதிமன்றமென்ன மேல் நீதிமன்றம் வரைக்கும் பார்த்து விடுகிறேன்... என்னுடைய சொத்து முழுக்க விற்றாலும் சரி கவலையில்லை” என்றார். கடைசியில் அவர் சொன்னது மாதிரியே செய்தார். சொத்து முழுக்க விற்று விட்டார். கடைசியில் நடுத்தெருவில் நின்றார். நான் யார் என்று புரிய வைக்கின்றேன் என்றார். புரியவைத்து விட்டார். அந்த ஆள் ஒரு வரட்டுப் பிடிவாதக்காரர் என்பதை மற்றவர்கள் புரிந்து கொண்டார்கள். இப்ப அவருக்கே அவர் யார் என்று புரியுதோ இல்லையோ? இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? “நான்” என்கின்ற அகந்தை தான்! தன்னைப்பற்றியே உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கின்ற குணம் பலரிடம் உண்டு. அதனால் வரும் கஷ்டத்தை அனுபவித்துப் பார்த்தால்தான் தெரியும். உண்மையான புகழ் இருக்கிறவர்களுக்கு அடைமொழி தேவையில்லை. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இவர்களுடைய பெயரைச் சொன்னாலே பெருமைதான். அவர்களையெல்லாம் யாரும் உயர், திருவாளர் அப்பர் என சொல்வதில்லையே. சுக முனிவர் ஒரு சமயம் பிரம்ம ஞானம் பெறவேண்டும் என நினைத்தார்.உடனே மதிலாபுரியை ஆட்சி செய்துகொண்டிருந்த ஜனக மன்னரைத் தேடி வந்தார். ஜனக மன்னர் ஒரு இல்லற ஞான மூர்த்தி துறவிகள். எல்லோரும் வந்து அவரை வணங்கக் கூடிய நிலையிலேயே இருந்தார். அரண்மனை வாசலில் காவலன் நின்று கொண்டிருந்தான். சுக முனிவரைப் பார்த்ததும் என்ன வேண்டும் உங்களுக்கு எனக் கேட்டார். “நான் ராஜாவைப் பார்க்க வந்திருக்கின்றேன்! போய்ச் சொல்லு” என்றார். “நீங்கள் யார் என்று தெரிந்தால்தானே சொல்லலாம். யார் வந்திருக்கிறதாக மன்னரிடம் போய்ச் சொல்லுவது” என்று கேட்டான். “சுகப் பிரம்ம மகாரிஷி வந்திருக்கிறார் எனச் சொல்லு” என்றார். அவனும் உள்ளே போய் மகாராஜா சுகப் பிரம்ம மகாரிஷி வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம் என்றான். ஜனகர் லேசா சிரித்தார். “காவலனே! அவருடன் வந்திருக்கிற நாலைந்து ஆட்களை விட்டிவிட்டு அவரை மட்டும் வரச் சொல்” என்றார். காவலனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் ராஜா கூறியபடியே இவரிடம் சொன்னான். “சுவாமி உங்களுடன் வந்திருக்கும் நாலைந்து ஆட்களை விட்டிவிட்டு உங்களை மட்டும் உள்ளே வரச் சொன்னார் ராஜா” என்றான். அவருக்குப் புரியவில்லை யோசித்தார். தன்னுடைய பெயரில் ஒட்டியிருக்கும் அடைமொழியின் நீளத்தை கொஞ்சம் குறைத்தார். “சுகப் பிரம்மரிஷி” வந்திருக்கிறார் என்று சொல்லு என்றார். அவனும் போய் சொன்னான். ஜனகர் “இன்னும் இரண்டு மூன்று பேர் இருக்கிறார்கள். அவர்களையும் விரட்டிவிட்டு வரச்சொல்” என்றார். அவனும் வந்து சொன்னான். இவர் மறுபடியும் யோசித்து விட்டு சுகப் பிரம்மம் வந்திருக்கிறார் என்று சொல்லு என்றார். அவனும் அப்படியே ராஜாவிடம் சொன்னான். “இன்னும் ஒருவர் இருக்கிறார் அவரையும் விட்டிவிட்டு வரச்சொல்” என்றார் ராஜா. அவனும் வந்து சொன்னான். இவர் யோசித்தார் கடைசியாக “அப்பா! சுகன் வந்திருக்கிறார் என்று சொல்லு என்றார்.”போய் சொன்னான். “உள்ளே அனுப்பு!” என்றார் ராஜா. சுக முனிவர் உள்ளே போய் அவர் முன் நின்றார். ஜனகர் அவருக்கு நேராக உபதேசிக்கவில்லை. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை கூப்பிட்டு உனக்கு விதித்த தண்டனையை நீக்குகின்றேன்! ஆனால் நான் சொல்லும்படி செய்ய வேண்டும் என்றார். “சரி” என்றான். “உன் தலையை மொட்டையடித்து அதில் ஒரு தட்டை வைத்து அதில் கொஞ்சம் எண்ணெய் ஊற்றி வைப்பேன். நீ அப்படியே ஒரு தரம் ஊரைச் சுற்றி வரவேண்டும். ஒரு துளி எண்ணெய்கூட கீழே ஊற்றக் கூடாது. அப்படி ஊற்றினால் உனக்கு தண்டனை உறுதியாகிவிடும்” என்றார். சரியென ஒத்துக் கொண்டான். மெதுவாக தரையில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். வழியில் வான வேடிக்கை, நடனம், சங்கீதம் என்று என்னென்னவோ நடந்தன. இவன் எதையும் கவனிக்கவில்லை. கவனம் முழுக்க தலையிலுள்ள தட்டிலேயே இருந்தது. அவனுக்கு விடுதலையும் கிடைத்தது. சுக முனிவருக்கு உண்மை புரிந்தது. கவனம் முழுக்க பரம்பொருளிடம் இருக்க வேண்டும். இந்த உலக நினைவு இருக்கக் கூடாது. அதுதான் பிரம்ம ஞானம் என்று புரிந்து கொண்டார். எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை என்னவென்றால் “நான்” என்கின்ற “கனம்” குறைய வேண்டும். கடைசியில் அது மறைய வேண்டும். இந்தக் காலத்தில் யாரும் பட்டம் பதவியெல்லாம் பெயருடன் சேர்ப்பதில்லை. சிலர் பெயரையே கூட விட்டு விடுகிறார்கள். கண்ணுசாமி என்பவரிடம் போய் நீங்க தான் கண்ணுசாமியா? எனக்கேட்டால் “அது நான் இல்லை” என்று சொல்லி விடுவார். ஏனென்று விசாரித்தால் அவர் “கண்ணுசாமி” என்ற பெயரில் பலரிடம் கடன் வாங்கியுள்ளாராம். அதனால் பெயரை மாற்றி விட்டாராம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

199



திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய்க்குளம் (மூதூர்) 1869 இல் பூர்த்தியாக்கப்பட்டு 17363 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது. அதேபோன்று அல்லைக்குளம் (மூதூர்) 1890 இல் பூர்த்தியாக்கப்பட்டு 12,413 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.

எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண் டின் ஆரம்பப்பகுதியிலும் கிழக்கு மாகாணப் பிரதேசத்திலிருந்த பாரிய புராதனக் குளங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டதன் விளைவாக அங்கு நெற்பயிர்ச் செய்கையும் கரும்புச் செய்கையும் பலமடங்கு விருத்தி செய்யப்பட்டது.

இதனால் அதிக நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசமாகக் கிழக்கு மாகாணம் மாறியது. இதேபோன்று வவுனியா மாவட்டத்தில் 1891 இல் பெரியகுளம் பூர்த்தியாக்கப்பட்டு 1919 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் கணுக்கேணிக்குளம் 1905 இல் பூர்த்தியாக்கப்பட்டு 1208 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளம் (Giant Tank) 1892 இல் பூர்த்தியாக்கப்பட்டு 15074 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளம் 1922 இல் பூர்த்தியாக்கப்பட்டு 18264 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டது. இவ்வாறான பாரிய குளங்களை விட சுமார் 82 இற்கும் அதிகமான நடுத்தர அளவுக் குளங்களும் பல நூற்றுக்கணக்கான சிறிய குளங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் அரை நூற்றாண்டுக் காலப்பகுதியிலும் வடகிழக்குப் பிரதேசங்களில் பூர்த்தியாக்கப்பட்டன.

இதன்மூலம் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியளிக்கப்பட்டமையால் நெல் உற்பத்தி அதிகரித்தமையைப் புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன. இவைபற்றிய பூரண விபரங்களைப் பின்வரும் அட்டவணையில் பார்க்கவும்.

> "பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி யிலும் இருபதாம்நூற்றாண்டின்ஆரம்பப்பகுதியிலும் கிழக்கு மாகாணப் பிரதேசத்திலிருந்த பாரிய புராதனக் குளங்கள் புனருத்தாரணம்செய்யப்பட்டுப் பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வச தியளிக்கப்பட்டதன் விளைவாக அங்கு நெற்பயிர்ச் செய்கையும் கரும்புச் செய்கையும் பலமடங்கு விருத்தி செய்யப்பட்டது"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

1870 இலிருந்து 1887 வரை நீர்ப்பாசன வேலைகளில் செலவு செய்யப்பட்ட பணத்தின் அளவில் அட்டவணை 1890 வைகாசி 7 ஆம் திகதி இந்து ஒகனில் வெளியாகியது.

| பிரிவு | செலவுத் தொகை (ரூபாவில்) |
|---|---|
| மேல்மாகாணம் | 121,577.00 |
| தென் மாகாணம் | 839,005.00 |
| மத்திய மாகாணம் | 222,704.00 |
| வடமத்திய மாகாணம் | 942,104.00 |
| வடமேல் மாகாணம் | 369,894.00 |
| கிழக்கு மாகாணம் | 783,862.00 |
| வடமாகாணம் | 79,565.00 |
| ஊவா மாகாணம் | -- |
| சப்ரகமுவ மாகாணம் | 1,020,181.20 |
| தீவு முழுவதும் | [illegible] |

வடமாகாணம் இத்திட்டத்தின் கீழ் கிடைத்த பலன்களில் உரிய பங்கைப் பெறவில்லை என்பதை இப்புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மாந்தோட்டையிலுள்ள கரச்சி இராட்சதக்குளமும் அதன் கீழ் வருடாந்தம் பத்து இல ட்சம் புசல்களுக்கு மேல் நெல் விளையக்கூடிய வளமான பெரும் பரப்பு நிலமும் இருந்தபோதும் இவ்வாறு நிகழ்ந்துள்ளது.

தெற்கு, வடமத்திய, கிழக்கு, மேற்கு மாகாணங்கள் இத்திட்டத்தினால் கூடிய நலன்களை அடைந்தன. கடந்த கால நிலையையும் இன்றுள்ள நிலையையும் இங்கு ஒப்பீட்டுப் பார்த்தல் கவனத்திற்குரியதாகும்.

இந்து ஒகனில் வெளியிடப்பட்ட செய்தி ஒன்றில் வட மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன வசதிகள் பற்றிய நீர்ப்பாசனப் பொறியியலாளர் பாக்கரின் அறிக்கை காணப்படுகின்றது.`

10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உள்ள பதவியா (பட்டிவில்) குளம் 45 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் அளிக்கக்கூடியதாக வுள்ளது. இதைப் புனருத்தாரணம் செய்ய 42 ஆயிரம் ரூபா செலவாகும் எனக் கணிக்கப்பட்டிருந்தது.

20 ஆயிரம் ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கக்கூடிய கரச்சிக் குளத்திட்டம் உள்ளது. இதைச் சீரமைப்பதற்கான தொகை 708000 ரூபா என மதிப்பிடப்பட்டிருந்தது. 13 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாசனம் அளிக்கக்கூடிய விளாங்குளம் (வவுனியா), நொச்சிமோட்டைக் குளம், கனகராயன் குளம், கிழக்கு நாயாறு ஆகியவை, பேராறு பள்ளத்தாக்கு, துவரையாறு, அக்கராயன் ஆறு, பாலியாறு, மேற்கு நாயாறு ஆகியவை பற்றிய அறிக்கைகள் இருக்கின்றன.

இத்திட்டம் பூர்த்தியாக்கப்படுகையில் இதன் கீழான பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தக்கூடிய நீர்ப்பாசன நிலம் தற்போதுள்ள வருடாந்த நெல் விளைச்சலுக்கு மேலதிகமாக 25 இலட்சம் புசலை வழங்கும் எனக் கணிக்கப்பட்டிருந்தது.

இத்தொகை வடமாகாண நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் அளவைவிட இரட்டிப்பு மடங்குக்கும் மேலானதாகும். மேலும் மன்னார் பிர தேசத்திலுள்ள இராட்சதக் குளங்களான கட்டுக்கரைக் குளத்தினதும் மற்றைய குளங்களினதும் வேலையும் இக்காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டது எனப் பார்க்கர் கூறுகின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2019 முதல் 13.04.2019 வரை



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்தில் தன, சப்தமாதிபதி செவ்வாய் 7இல் பலம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கின்றார். தனாதிபதி இராசியைப் பார்க்கும்பொழுது தன வரவிற்குப் பஞ்சம் இருக்காது. பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிப் பல காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். எதை, எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ, அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்ததை விடவும் கூடுதல் இலாபம் கிடைக்கும்.

உறவினர்களும் நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவ முன்வருவர். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் வந்து கொண்டே இருக்கும். புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். இராசிநாதன் சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருப்பதால் சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரும். மருத்துவச் செலவுகள் குறையும். வீண் விரயங்களிலிருந்து விடுபட்டு, வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள். ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ வேண்டுமென்ற ஆசையும் நிறைவேறும் காலம் இது.

தேவையில்லாத காரணங்களுக்காக சண்டை போட்டு விலகிச் சென்ற நண்பர்கள் இப்பொழுது தானாக வந்து சேருவார்கள். அன்றாட வாழ்க்கையில் இருந்த தடைகள் அகலும். 9 இல் ராகு இருப்பதால் ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கப் போகின்றது. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். சூரிய பலம் 6 இல் இருப்பதால் அரசு வழி உத்தியோகத்திற்கு முயற்சி செய்தவர்களுக்கு அது கைகூடும். அரசாங்க விருதுகள் கூட ஒரு சிலருக்குக் கிடைக்கலாம்.

வங்கிகளில் கடனுதவி கேட்டு

## செல்வாக்கு அதிகரிக்கும் நேரம்!

விண்ணப்பித்தவர்களுக்கு அது கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பழைய சொத்துக்களை விற்றுவிட்டு அதன்மூலம் வரும் தொகையைக் கொண்டு தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். எது எப்படி இருந்தாலும் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் உங்களுக்கு அதிகமாகவே உள்ளது. வெற்றியை குறிப்பிடும் ஸ்தானத்தில் கேது வீற்றிருக்கின்றார்.

9 ஆம் இடம் எனப்படும் பித்ரு, பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் ராகு வீற்றிருக்கின்றார். எனவே ராகு-கேதுக்களுக்கு உரிய சாந்தி பரிகாரங்களை முறையாகச் செய்து கொள்வது நல்லது. அது மட்டுமல்லாமல் இம்மாதம் பங்குனி உத்திர விழா நடைபெறும். அன்றைய தினம் முருகப்பெருமானுக்கு முறையாக விரதம் இருந்து கந்தசஷ்டி கவச பாராயணம் படித்தால் காரியங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**

மார்ச் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படலாம். அதே நேரத்தில் செவ்வாய் தன் பார்வையை அவரது சொந்த வீடான விருச்சிக இராசியில் செலுத்துகின்றார். விருச்சிகம் செவ்வாய்க்குச் சொந்தமான வீடு என்பதால் அதன் பார்வை அங்கு பதியும் பொழுது அற்புதமான பலன்கள் உங்களைத் தேடி வரும். ஆரோக்கியத் தொல்லையைச் சரி செய்து கொள்ள ஒரு சிறு தொகையைச் செலவிட நேரிடும். அதே நேரம் செவ்வாய் பார்வையால் சொத்துக்கள் உங்களுக்குச் சேரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். உடன்பிறப்புகள் உங்கள் தொழிலில் கூட்டுச் சேருவர். முருகன் வழிபாடு இக்காலத்தில் முன்னேற்றத்தை தரும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்!**

மார்ச் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசி நாதன் பஞ்சம ஸ்தானத்திற்குச் செல்லும் பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். குறிப்பாக அங்குள்ள புதனுடன் இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே, பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். ஆக்கபூர்வமாக சிந்தித்துச் செயற்படுவீர்கள். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். கல்யாணம், காதுகுத்து, கட்டடத் திறப்பு விழா, கடைத் திறப்பு விழா, பெண்




களின் சுபச்சடங்குகள், பெற்றோர்களின் மணிவிழாக்கள் போன்றவை படிப்படியாக நடைபெறுவதற்கான சூழ்நிலையை கிரக நிலைகள் அமைத்துக் கொடுக்கும்.

**நீச்ச புதனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 8 ஆம் திகதி மீன இராசிக்குப் புதன் செல்கின்றார். அந்த வீடு புதனுக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும் விரயாதிபதியாக இருந்து நீச்சம் பெறுவதால் ஒரு விதத்தில் நன்மைதான். புதன் 9 இற்கு அதிபதியாகவும் இருப்பதால் பெற்றோர்களின் பாசம் குறையலாம். பாகப்பிரிவினைகள் தாமதப்படும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விநாயகரை வழிபட்டு வருவது நல்லது. சங்கடஹர சதுர்த்தி அன்று விரதம் இருந்தால் சங்கடங்கள் தீரும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகமும் புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டு. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதமாக நடந்து கொள்வீர்கள். சுக்கிரப் பெயர்ச்சிக்குப் பிறகு கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வேலை வாய்ப்புகளுக்காக ஏதேனும் முயற்சிகள் செய்திருந்தால் அந்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும் இலாகா மாற்றங்கள் மனதிற்கு இதமளிக்கும். வெளிநாட்டிலிருந்து கூட ஒருசிலருக்கு அழைப்புகள் வரலாம். ஆறுமுகன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் தன பஞ்சமாதிபதியான குரு பகவான் தன ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பது மிகுந்த யோகமாகும். பொருளாதார நிலை உயரும் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். பொதுவாகவே தன ஸ்தானம் வலுவாக இருந்தால் திட்டமிட்ட காரியங்கள் நடைபெறும்.

அந்த அடிப்படையில் இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த குரு இப்பொழுது செல்வ வளம் பெருகும் இடமான தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, கரைந்த சேமிப்புக்களை ஈடு கட்டுவீர்கள். கொடுக்கல்-வாங்கல் வெற்றிநடை போடும். கூட்டாளிகள் உங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். உங்கள் இராசிநாதன் செவ்வாய் ஜீவன ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் பலம் பெற்றிருக்கின்றார். குரு மங்கள யோகமும் குருச்சந்திர யோகமும் ஏற்படுகின்றது. தொழில் ஸ்தானாதிபதி சூரியன் ஐந்தாம் இடமான பஞ்சம ஸ்தானத்தில் குரு வீட்டில் சஞ்சரிக்கின்றார். எனவே, இம்மாதம் மகிழ்ச்சி அதிகரிக்கும் மாதமாக அமைகிறது.

நலமுடன் வாழ நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வளமுடன் வாழ வாரிசுகளால் கூடுதல் வருமானமும் வந்து சேரும். அரசு வழி ஆதரவு கிடைக்கும். இந்த மாதத்தில் வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். கடை திறப்புவிழா, கட்டடத் திறப்புவிழா போன்றவற்றில் கவனம் செல்லும். வி.ஐ.பிக்கள் வீடு தேடி வந்து உதவிக்கரம்

## நிதி நிலை உயரும்!

நீட்டுவர். இதுவரை இருந்த தடைகள் அகலும். அடிப்படை வசதிகள் பெருகும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். 2 இல் கேது, 8 இல் ராகு இருப்பதால் சர்ப்ப தோஷ நிவர்த்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

இந்த மாதம் பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறுகின்றது. உங்கள் இராசிநாதன் செவ்வாய்க்குரிய தெய்வமான முருகனுக்கு கொண்டாடும் விழா. எனவே, அதில் கலந்து கொண்டு கந்தப் பெருமானை சொந்தப் பெருமானாக நினைத்து வழிபடுவது நல்லது. மேலும், ஏழரைச் சனியில் பாதச் சனியின் ஆதிக்கமும் நடப்பதால் சிறப்பு தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது. ஒவ்வொரு சனிக்கிழமையும் தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிபட்டு வாருங்கள். அனுமன் வழிபாடும், சனி வழிபாடும் இணைந்து செய்தால் இனிய பலன் கிடைக்கும்.

**ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்**


மார்ச் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியையே பார்ப்பது யோகம்தான். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். கட்டளைக்கு அடிபணியும் பணியாளர்களால் தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும். கட்டடம் கட்டும் முயற்சி கைகூடும். அரசுவழி அனுகூலம் கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஒத்துழைப்பால் நிறைய காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உடன் பிறப்புகள் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர். கடமையைச் சரிவரச் செய்து புகழ் பெறுவீர்கள்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்**

மார்ச் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள புதனுடன் இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே, நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள். பழைய வாகனங்களுக்கான செலவுகள் அதிகரிக்கின்றதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது, புதிய வாகனம் வாங்க உகந்த நேரமிது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகள் சலுகைகள் கொடுத்து கடன் வழங்கவும் முன்வருவர். வாங்கும் வாகனத்தின் எண் உங்களுக்கு ஏற்ற விதத்தில் அதிர்ஷ்டம் தரும் வகையில் இருக்க வேண்டும். பிறந்த திகதிக்கும் பெயர் எண்ணுக்கும் பொருத்தமாக அமைந்துள்ள எண்ணின் ஆதிக்கத்தில் வாங்குவது நல்லது. தாய் வழி ஆதரவு கிடைக்கும்.

**மீன புதனின் சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த




புதன் ஏப்ரல்-8 ஆம் திகதி ஐந்தாம் இடமான மீன இராசிக்குச் செல்கின்றார். அந்த இடம் புதனுக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை புதன் அஷ்டம இலாபாதிபதி ஆவார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான். அதே நேரத்தில் லாபாதிபதியாகவும் புதன் இருப்பதால் விரயங்கள் ஏற்படலாம். அவற்றைச் சுப விரயங்களாக மாற்றிக் கொள்வது நல்லது. வீட்டிற்குத் தேவையான அத்தியாவசிப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கும் யோகமும் உண்டு. இம்மாதம் சனிக்கிழமை தோறும் ஆனைமுகன் வழிபாடும் வியாழக்கிழமை அன்று குரு வழிபாடும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு ஏராளமான நற்பலன்கள் நடைபெறும் மாதமாகும். தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். திறமை பளிச்சிடும். தெய்வீக நாட்டம் கூடும். பெருமைக்குரிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். வருமானம் போதுமானதாக இருக்கும். வாழ்க்கைத் துணையின் பாசமழையில் நனைவீர்கள். கணவன்-மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வழிவகுத்துக் கொடுப்பீர்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளின் உதவி தக்க வீதத்தில் வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மேலதிகாரிகள் கேட்ட உதவிகளைச் செய்வர். பங்குனி உத்திர நாளில் முருகப்பெருமானை வழிபட்டு நன்மைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத் தனியரசு தாயகத்தில் அமைய வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

(லண்டன்)

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு. தமிழினஅழிப்புக்கு எதிராக அனைத்துலக அரங்கில் நீதி கோரல். தமிழர் தாயகத்தின் மேம்பாடு. தமிழ்த் தேசிய அரசியற்பேரியக்கம் ஒன்றுக்கான தேவை போன்ற விடயங்களில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் இவ் ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது



தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும் இனஅழிப்புக்கு உட்படாமலும் தமது மரபுவழித் தாயகத்தில் வாழவேண்டுமானால் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசொன்று தமிழர் தாயகத்தில் அமைய வேண்டும் என்பதே அரசியல் தீர்வு தொடர்பான எமது அரசியல் நிலைப்பாடு. இதனை இன்னொரு வகையில் சொல்வதானால், இலங்கைத்தீவில் இரு அரசுகள் அமைவதே தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வாக அமையும் என்றே நாம் கருதுகின்றோம்.

அத்தகைய தீர்வு என்பது 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் மூலம் தமிழ் மக்களின் அரசியல் ஆணையைப் பெற்றதொரு நிலைப்பாடாகும். 50 ஆயிரத்துக்கும் அதிகமான மாவீரர்கள் தமது உயிர்த்தியாகம் மூலம் வலுப்படுத்திய ஒரு நிலைப்பாடு. தமிழீழ மக்களின் அரசியற்பெருவிருப்பாக இந் நிலைப்பாடு அவர்களின் ஆழ்மனதில் உறுதியாக இருக்கிறது என நாம் கருதுகின்றோம்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின் இந் நிலைப்பாடு குறித்துப் பேசுவதற்கும், செயற்படுவதற்கும் தாயகத்தில் அரசியல்வெளி இல்லாதிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

இருந்தபோதும் தமிழீழத் தனியரசு உட்பட்ட தீர்வு முறை குறித்து தாயகத்திலும், புலம் பெயர்ந்தும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டு, மக்கள் அளிக்கும் தீர்ப்பின் அடிப்படையில் இலங்கைத்தீவின் தேசியப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காணப்படுவதே உரிய ஜனநாயக வழிமுறையிலான அணுகுமுறையாக இருக்கும் என்பதே எமது நிலைப்பாடு.

தனியரசு உருவாக வேண்டும் என விரும்புவோர் அதற்காகக் குரல் கொடுக்கட்டும். அதனை எதிர்ப்போர் எதிர்க்கட்டும். தமிழ் மக்கள் தமது தீர்ப்பை வழங்கட்டும் .

இந் நிலைப்பாட்டை ஏற்று, 6 ஆவது திருத்தச் சட்டத்தை அகற்றி, ஒரு மக்கள் வாக்கெடுப்பை நடத்தி அரசியற்தீர்வைக் காண முயலும் அளவுக்கு சிங்கள தேசத்தின் தலைவர்கள் அரசியல் முதிர்ச்சியும், ஜனநாயகப்பண்பும் கொண்டவர்கள் அல்ல என்பதனையும் நாம் அறிவோம். ஆனால், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, அதற்காகப் போராடுவது தமிழ் மக்களின் உரிமை. அதனை நாங்கள் செய்கின்றோம்.

தாயகத்தில் இதற்கான அரசியல்வெளி இல்லாத காரணத்தால் இது குறித்து செயற்பட வேண்டிய கூடுதல் கடப்பாடு எமக்கு இருப்பதாகவும் நாம் உணர்கின்றோம். இந்த நிலைப்பாட்டை வலுப்படுத்துவதற்குரிய பூகோள, புவிசார் அரசியல் நிலைமைகள் திரட்சியடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்பதும் இம்முயற்சி யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டதல்ல என்ற புரிதலும் நமக்கு உண்டு.

தமிழின அழிப்பு குறித்து இலங்கைத்தீவில் தமிழர் தேசம் இலங்கை அரசின் இனஅழிப்புக்கு உள்ளாகிறது என்பது எமது நிலைப்பாடு.

தமிழின அழிப்பு என்பது இலங்கை அரசின் கொள்கையாக இருப்பதால், எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழின அழிப்பு முயற்சி தொடர்ந்து கொண்டிருப்பதனை நாம் காண்கிறோம்.

ஆட்சியாளரின் தன்மைக்கேற்ப இனஅழிப்பு வடிவங்கள் மாறுபடுகின்றனவேயன்றி தமிழின அழிப்புத் திட்டமும் முயற்சியும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இனஅழிப்பு என்பது பெரும் அரசியல் பரிமாணம் கொண்ட எண்ணக்கருவாக இருப்பதாலும், இனஅழிப்பு நடைபெறுகிறது என்பதனை ஏற்றுக் கொள்வதால் ஏற்படக்கூடிய அரசியல் விளைவுகள் காரணமாகவும் அனைத்துலக அரசுகளும் இனஅழிப்பை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டுகின்றன. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தமிழின அழிப்புத் திட்டத்தின் தீர்மானகரமான ஓர் அங்கமாகும்.

இதனை யுத்தக்குற்ற விசாரணையாகச் சுருக்குவதில் எமக்கு உடன்பாடில்லை. தமிழின அழிப்புக்கு நீதி வழங்கும் அதிகாரம் கொண்ட மையமாகவும் நாம் மனித உரிமைகள் பேரவையைப் பார்க்க முடியாது.

இதனால் தமிழின அழிப்புக்கான நீதியினை நாம் ஜெனிவாவில் எதிர்பார்க்கவும் முடியாது. ஜெனிவா மனித உரிமைப்பேரவை எமது நீதி நோக்கிய பயணத்தின் ஓர் ஆரம்பப்புள்ளி மட்டுமே. அதன் வரையறைக்குள் நின்று மட்டும் நாம் நீதியைத் தேட முடியாது.

இதனால்தான் ஜெனிவா மனித உரிமைப்பேரவையிடம், இலங்கை தொடர்பான விடயத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையிடம் கையளிக்குமாறும், தமிழின அழிப்புத் தொடர்பாக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடமோ, அல்லது அதற்கிணையானதோர் அனைத்துலகப் பொறிமுறையிடமோ கையளிக்குமாறும் நாம் ஆரம்பம் முதல் கோரி வந்திருக்கின்றோம்.

எமது இந்த நிலைப்பாட்டுக்கு தற்போது ஆதரவு அதிகரித்து வருகிறது. எனினும் தமிழ் மக்களின் நீதி கோரும் போராட்டம் ஒரு நீண்டதூரப்பயணமாகவே அமையும். அனைத்துலக அரசுகள் தத்தமது நலன்களைத்தாண்டி நீதியின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டிய நிலை உருவாக்கப்பட வேண்டும். தமிழர் தாயகத்தின் மேம்பாடு சமூக, பண்பாட்டு மேம்பாடு குறித்து நாம் தமிழ் மக்களின் பார்வையில் மேம்பாட்டுத் திட்டங்களை வடிவமைத்துச் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். தமிழர் தேசத்தை சிங்கள தேசத்தில் தாங்கி நிற்க வைக்கும் வகையிலான திட்டங்களை மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தும் அணுகுமுறை சிங்கள அரசிடம் இருக்கிறது என்பதை நாம் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும். மேம்பாட்டின் அரசியல் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் கைகளில் அரசியல் அதிகாரம் இல்லாத போது, தமிழர் தேச வளர்ச்சி என்ற நோக்கு நிலையில் மேம்பாட்டு நடவடிக்கைகளில் இதேவேளை அரசியல் அதிகாரம் கிடைக்கும் வரை தமிழர் தேசம் தன்னை மேம்படுத்தும் முயற்சிகளில் புலம் பெயர் தமிழ் மக்களும், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து மேற்கொள்வதற்கான வழிவகைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். உலக மயமாக்கல் அரசுகளின் கட்டுப்பாடுகளைத் தாண்டித் தரக்கூடிய வெளிகளை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதையும் கவனத்திற் கொண்டு நாம் செயற்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மக்கள் வாக்கெடுப்பின் ஊடாகப் பெறப்படும் அரசியல்தீர்வு, தமிழின அழிப்புக்கு எதிராக அனைத்துலக அரங்கில் நீதி தேடல், தமிழர் தேசம் என்ற நோக்கு நிலையில் இருந்து தமிழர் தாயக மேம்பாடு போன்ற நிலைப்பாடுகள் தாயக மக்களும், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் பொதுவாக முன்வைக்கக்கூடிய அரசியல் கோரிக்கைகளே.

எனவேதான் தாயக, புலம்பெயர் அமைப்புக்கள் இது குறித்துப் பேசி, மக்கள் மயப்பட்ட ஒரு தேசிய அரசியல் பேரியக்கத்தை உருவாக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை நாம் கொண்டுள்ளோம். இப் பேரியக்கம் ஓர் ஐக்கிய முன்னணி என்ற அரசியல் வடிவத்தில் அமைய முடியும். இந்த அரசியல் பேரியக்கமே தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் என்ற நிலையும் எட்டப்பட வேண்டும்.

தேர்தல் என்பது தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியே என்ற புரிதல் ஏற்பட வேண்டும். தேர்தலுக்கெனவும் தேர்தல்களுக்கப்பாலும் மக்களை அணிதிரட்டி, மக்களில் தங்கி நின்று மக்கள் நலன் என்ற நோக்குநிலையில் செயற்படும் தமிழ்த் தேசியப் பேரியக்கமொன்று உருவாக்கப்படுவது இன்றைய காலத்தின் தேவையாகவே நாம் உணர்கின்றோம் என நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.ருத்ரகுமாரான் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பால்மாவை பதுக்கினால் கடும் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பால்மா வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்யும் மற்றும் பதுக்கி வைக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை எச்சரித்துள்ளது.

பால்மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவது போல் காண்பித்து சில வர்த்தகர்கள் பால்மாக்களை பதுக்கி வைத்துள்ளமை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அதிகாரசபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க பதுக்கி வைக்கப்பட்டுள்ள பால்மா தொடர்பில் ஆராய விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பால்மாக்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அன்றாட பாவனைக்காக கொள்வனவு செய்யப்படும் பால்மாக்களை தற்போது சந்தையில் காணமுடியாதுள்ளதாகவும் இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-7)

## அலுக்கோசு பதவிக்காக 79 விண்ணப்பங்கள் தெரிவு

(கொழும்பு)

அலுக்கோசு பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நாளை 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களத்தில் இந்த நேர்முகப்பரீட்சைகள் இடம்பெறவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அலுக்கோசு பதவிக்காக அமெரிக்க பிரஜை உட்பட 102 பேரின் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் அவற்றிலிருந்து 79 விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த 79 விண்ணப்பங்களில் இருவர் அலுக்கோசு பதவிக்காக தெரிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



யாழ்.நாவற்குழி மகா வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை கடந்த 4 ஆம் திகதி அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடை பெற்றது.

(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலரிமாளிகையில் அமெரிக்காவின் செயலகமா?

## வீரவன்சவின் குற்றச்சாட்டை நிராகரித்த சாகல



(கொழும்பு)

அமெரிக்காவின் மிலேனியம் சவால் அமைப்பின் பணியகம் ஒன்று அலரி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ளதாக, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சுமத்திய குற்றச்சாட்டை, அமைச்சர் சாகல ரத்நாயக்க மறுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச, பிரதமரின் அதிகாரபூர்வ வதிவிடமான அலரிமாளிகையில் அமெரிக்கா, மிலேனியம் சவால் அமைப்பின் செயலகத்தை அமைத்துள்ளது என்றும், கொழும்பு துறைமுகத்திலிருந்து திருகோணமலை வரை, 200 கி.மீ. தூரத்துக்கு சிறப்பு பொருளாதார வலயம் அமைக்கப்பட்டு அங்கு அமெரிக்காவின் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும், குற்றம்சாட்டியிருந்தார். இதற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சாகல ரத்நாயக்க,

“நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பொய்யான தகவல்களைப் பரப்புவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

மிலேனியம் சவால் அமைப்போ அல்லது வேறெந்த அமெரிக்க முகவர் அமைப்போ, அலரி மாளிகையில் செயலகத்தை அமைக்கவில்லை.

பொய்களைச் சொல்வதற்கும் ஒரு எல்லை உள்ளது. ஊடகப் பரப்புரைக்காக, விமல் வீரவன்ச கற்பனைக் கதைகளைக் கட்டவிழ்த்து விடுகிறார்” என்றும் சாகல தெரிவித்தார். (இ-7)

## 1000 தபால் அதிபர்களை இணைக்க நடவடிக்கை

### அமைச்சர் ஹலீம் தகவல்



(கண்டி)

தலைமைத் தபால் அலுவலகத்தில் சேவைக்காக 1000 தபால் அதிபர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

கண்டி பொக்காவெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையில் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு- செலவுத் திட்ட விவாதம் நிறைவு பெற்ற பின்னர் இவர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் தெரிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தெரிவு செயப்படுவார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## “பெருஞ்சீரகம்”



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


தமிழ்ப்பெயர்: Perunjiragam, Sohikirai

ஆங்கிலப்பெயர்: Fennel

சிங்களப்பெயர்: Mad uru, Mahaduru

சமஸ்கிருதப்பெயர்: Ahichhatra, Avalcapushpi

Botanical Name: Foeniculum vulgare gaston



ஓராண்டுவாழக்கூடிய மெல்லிய சுணையுடைய செடி. 751 மீற்றர் உயரம் வரை வளரும். ஒன்று விட்ட இலையமைப்பு தனி இலை, இலைகளின் பக்க வாட்டில் பற்கள் போன்ற அமைப்புடையது. சிறிய கோளவடிவ பழங்கள்மண்ணிறமுடையவை ஒரு விதையை கொண்டது. எகிப்து, கிறீஸ் நாட்டுக்குரிய மரம். ரஷ்யா, ஸ்பெய்ன் போன்ற நாட் டில் பயிரிடப்படுகிற உலர்ந்த வாசனையை கொண்ட செடி. இதன் உலர்ந்த கனிகளில் நிரம்பாத கொழுப்பமிலம் அதிகளவில் காணப்படும்.

குறிப்பு:

வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை என்ற தலையங்கத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் வளராத மூலிகை பலவும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் உதாரணமாக காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், குரோசானசி ஓமம், குங்குமப்பூ, ஓமம் போன்ற மூலிகைகள் மக்களால் கைமருத்துகளாகவோ/உப உணவுக் கூறுகளாவோ பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இவற்றை நாட்டு மருந்துக்கடை, ஓமம் போன்றவற்றை பல்பொருள் வாணிபர் கடைகளிலும் பெறு கின்றது. எனவே இவை பற்றிய தெளிவு மக்களுக்கு கட்டாயம் தேவை.

உதாரணமாக கருஞ்சீரகம் சாதாரணமாக உடல் பருமன் உள்ளவர்கள் இலகுவாக வாங்கிப் பயன்படுத்துகின்றார்கள். இது இலகுவில் கிடைக்கக்கூடிய தொன்றாகும். பொதுவாக கருஞ்சீரக விதையுடன் பிரமதண்டு விதையினை கலப்படம் செய்கின்றனர். ஏனெனில் உருவத்தில் ஒத்தாகவும் கருஞ் சீரகத்தினை இறக்குமதி மூலம் பெற்றுக் கொள்வதாலுமாகும். பிரமதண்டு நச்சுப் பயிர், களை பயிர். கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் இலகுவாக வளரக் கூடியது. எனவே இவற்றை இனங்கண்டுமக்கள்பயன்படுத்தவேண்டும் என்ற நோக்கிலேயே வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகையில் இவை இடம் பெறு கின்றது.

பெருஞ்சீரகம் சோம்பு என்றும் அழைக்கப்படும்.

➢ பெருஞ்சீரகம், வெந்தயம் இரண்டையும் சம அளவு எடுத்து பொடி செய்து 5 கிராம் சாப்பிட்டு வந்தால் அனைத்து வயிற்று வலிகளும் தீரும்.

➢ பெருஞ்சீரகத்தை கற்பூர வள்ளிச் சாற்றில் ஊறவைத்து



சூரியஒளியில் காயவைத்து பொடி செய்து கொள்ளவும். இதில் தினமும் 2 கிராம் அளவில் சாப்பிட்டு வந்தால் சளி உள்ளிட்ட பிற கப நோய்கள் குணமாகும்.

➢ பெருஞ்சீரகம், வேப்பிலை, மிளகு மூன்றையும் சம அளவு எடுத்து அரைத்து 5கிராம் அதிகாலையில் சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் புழுக்கள் அனைத்தும் ஒழியும்.

➢ பெருஞ்சீரகம், அதிமதுரம் இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் சாப்பிட்டு வந்தால் ஒற்றைத் தலைவலி குணமாகும்.

➢ பெருஞ்சீரகம், அரோகம் பட்டை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து 5 கிராம் சாப்பிட்டு வந்தால் கருப்பை சார்ந்த நோய்கள் குணமாகும்.

➢ பெருஞ்சீரகம், கருஞ்சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து தயிர் சேர்த்து அரைத்து தேமல், படை, சிரங்கு உள்ள இடங்களில் பூசினால் அவை உடனே குணமாகும்.

➢ பெருஞ்சீரகம், பார்லி, மஞ்சள் மூன்றையும் ஒன்றாக சேர்த்து (கஷாயம்) காய்ச்சி குடித்தால் சிறுநீரக நோய்கள் குணமாகும்.

➢ பெருஞ்சீரகம், கரணை வேர், பசலைக்கீரை மூன்றையும் சம அளவு எடுத்து கஷாயம் காய்ச்சி 30 மில்லிமீற்றர் குடித்தால் சிறுநீரகக் கற்கள் கரையும்.

➢ பெருஞ்சீரகம், மாவிலங்கம்பட்டை, மிளகு மூன்றையும் சம அளவு எடுத்து கஷாயம் காய்ச்சி 100 மில்லி லீற்றர் குடித் தால் மாதவிலக்கு கோளாறுகள் சரியாகும்.

➢ பெருஞ்சீரகம், மிளகு ,எள்ளு மூன்றையும் சம அளவு எடுத்து பொடி செய்து தினமும் காலையில் 8 கிராம் அளவு சாப்பிட்டுவந்தால் வெண் குஸ்டம் மறையும்.

“யோனி நோய் குன்மம்
உருட்சைமந் தம் பொருமல்
போனமுறுகாசம்பீலிகமிறைப்
-பீனஉரைசேர்க்கின்ற வாதமு
போஞ்சீர் பெரிய சீரகத்தால்
மூக்கு நோமில்லை மொழி”

மேலும் சூதக வாயுவைக் கண்டிக்கும்.

இதை இளவறுப்பாக வறுத்துப் பொடித்து வேளை யொன்றுக்கு 1/2- 2 கிராம் எடை வீதம் தனியாகவாவது, சர்க்கரையுடன் கலந்து தினம் இரு வேளை உட்கொள்ள மேற்கூறிய நோய்கள் விலகும்.

### சோம்புத் தேநீர்

சோம்பு-1பங்கு, நீர்-20 பங்கு விட்டு வாலையிலிட்டு வடிக்கத் தேநீரிறங்கும். 15 மில்லி லீற்றர் - 20 மில்லி லீற்றர் வரை வழங்கலாம்.


பெருஞ்சீரகம் சமையற் தேவைக்கு உப உணவுக்கூறாக பயன்படுத்தப்படுகிறது. செரியாமை, வயிற்றுப் பொருமலுக்கு சிறந்த உணவுக் கூறாக உள்ளதோடு சுவாச நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணிகளின் முகாமைத்துவம் சார்பான சட்டங்களும் அவை செயற்படும் முறைமைகளும் பகுதி-1

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



"LDO permits" மூலம் பெறப்பட்ட காணியை எந்தவொரு நடவடிக்கை மூலமும் விற்க முடியாது **(section-39).** சில சந்தர்ப்பங்களில் குத்தகைக்கு விட அல்லது ஈடுவைக்க முடியும் **(section-43).** இங்கு **section** என்று கூறப்படுவது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளாகும்.

➢ "LDO permits" ஐ இரத்துச் செய்தல்

ஒரு காணிக்கு **"LDO permits"** சில நிபந்தனைகளுக்கு உட்படவே வழங்கப்படுவதால், அந் நிபந்தனைகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து பிரதேசச் செயலாளர் அதற்கான காரணத்தை ஒரு அறிவித்தல் மூலம் கேட்க முடியும்.

காணியை வைத்திருப்பவர் சரியான காரணம் கொடுக்கப்படாத விடத்து, கொடுக்கப்பட்ட **"LDO permits"** ஐ இரத்துச் செய்ய முடியும். இவ்வாறு இரத்துச்செய்யும் முன் எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் **(sections)** 109-113 வரையில் தெளிவாகக்கொடுக்கப்பட்டுள்ளன. **"LDO permits"** ஐ இரத்துச் செய்தபின் அவ் **"LDO permits"** வைத்திருந்தவர் நீதிமன்றத்தின் மூலம் அக்காணியில் இருந்து வெளியேற்றப்படுவார் **(sect ion-125).** அவ்வாறு வெளியேற்றப்பட்டவர் தனக்கு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்யமுடியும் **(section-126).** ஒருவர் வெளியேற்றப்படும்போது அவருக்கு ஏதும் நட்டஈடு கொடுக்க வேண்டியதா? அல்லது இல்லையா? என்பதுபற்றி சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

**➢ காணி வழங்கல் அன்பளிப்பு பத்திரம் (LDO grants) மூலம் பராதீனப்படுத்துதல்**

"LDO permits" காணிகள், பொதுவாக காணிக்கச்சேரி மூலம் **LDO grants** ஆகமாற்றம்செய்யப்படுகின்றன **(section,20).** காணி வழங்கல் அன்பளிப்பு பத்திரம் **(LDO grants)** வழங்கும்போது அதனுடன் படம் **(plan)** இணைக்கப்படல் வேண்டும் **(section,30),** ஜனாதிபதியினால் கையெழுத்திடப்பட்ட அக் காணி வழங்கல் அன்பளிப்பு பத்திரம் பிரதேசச் செயலாளர் அலுவலகத்தில் பதியப்படுவதோடு காணிப்பதிவுக் காரியாலயத்திலும் பதியப்படவேண்டும். காணி வழங்கல் அன்பளிப்பு பத்திரமும் ஒரு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்படவே வழங்கப்படுகின்றன. அந்நிபந்தனைகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படாதவிடத்து பிரதேசச் செயலாளர் அதற்கான காரணத்தை ஒரு அறிவித்தல் மூலம் கேட்க முடியும். காணியை வைத்திருப்பவர் சரியான காரணம் கொடுக்கப்படாதவிடத்து, கொடுக்கப்பட்ட **"LDO grants"** ஐ இரத்துச் செய்ய முடியும். முன்னர் கூறியது போல் அவரை வெளியேற்றவும் **(section-125).** அவ்வாறு வெளியேற்றப்பட்டவர் தனக்கு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக அப்பீல் செய்யவும் முடியும் **(section-126).**

இவ்வாறு வழங்கப்பட்ட காணி அளிப்புப் பத்திரங்கள் காலத்திற்கு காலம் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டன. உதாரணம் சுவர்ண பூமி உறுதிகள். அவைபற்றி கீழே கூறப்பட்டுள்ளது.

**➢ சுவர்ண பூமி உறுதிகள்**

ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட காணித்துண்டை அவர் அபிவிருத்தி செய்திருந்தால், அக்காணித்துண்டு எல்லையிடப்பட்டு, அளக்கப்பட்டு, படம் வரையப்பட்டு வரைபடத்தை உள்ளடக்கிய சான்றிதழ் வழங்கப்படுவதன் மூலம் அவருக்கு நிபந்தனையுடனான ஆட்சி உரிமை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு, அது சுவர்ண பூமி உறுதித்திட்டத்தின் கீழ் சொத்துரிமையாகும். இவ்வாறு வழங்கப்பட்ட உறுதிகள் சுவர்ண பூமி உறுதிகள் எனப்பட்டன. நிலஅளவைத் திணைக்களத்தால் கிட்டத்தட்ட 600,000 இலட்சம் சுவர்ணபூமி உறுதிகளுக்கான படங்கள் தயாரிக்கப்பட்டன.

**➢ ஜெயபூமி காணி உறுதிப் பத்திரங்கள்**

1995இல் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் (காணி அளிப்புப் பத்திரத்துடன் காணியின் நில அளவைப்படம் இணைக்கப்பட வேண்டியதில்லை என்ற திருத்தம்) கொண்டுவரப்பட்டு ஜெயபூமி காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஜெயபூமி காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல் ஆரம்பத்தில் நற்பலனைக் கொடுத்திருந்தபோதும் உறுதிப்பத்திரங்களுடன் அக் காணிக்கான நில அளவைப்படங்கள் இணைக்கப்படாததால் பின்னர் பல சிக்கல்களைக் கொடுத்தது. ஒருகாணிக்கு இருவர் உரிமை கோரல், ஒரு உறுதிப்பத்திரத்தை வைத்து இரு காணித்துண்டுகளின் வளங்களை அனுபவித்தல், காணிகளுக்கு பாதைகள் இல்லாமை போன்றவை அவற்றுள் சிலவாகும்.

**➢ ரத்னபூமி காணி உறுதிப் பத்திரங்கள்**

ஜெயபூமி காணி உறுதிப்பத்திரத்தால் ஏற்பட்ட சிக்கல்களை சரிசெய்யு முகமாக 2004இல் ரத்னபூமி காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்திய போதும் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தின்படி அரசகாணிகளுக்கு மாகாணசபைகளே உரித்துடையவை என நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டதால் அது தொடர்ந்து செயற்படவில்லை. அன்றைய காலத்தில் மத்திய அரசும் மாகாணசபையும் வெவ்வேறு அரசியல் கட்சிகளாக இருந்ததாலேயே இச்சிக்கல் ஏற்பட்டது.

அதன்பின்னர் மகிந்த சிந்தனையின் கீழ் 100,000 காணித்துண்டுகள் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்படி வறியமக்களுக்கு கொடுப்பதற்கு அளிவைகள் செய்யப்பட்டன. இவ் வழங்கல் றண்பிம **(Ran Bima)** உறுதி வழங்கல் என அழைக்கப்படுகின்றது. இத் திட்டம் தற்போதும் நடைமுறையில் உள்ளது.

**➢ ரண்பிம உறுதிப் பத்திரங்களை வழங்குதல்**

காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ரண்பிம உறுதிப்பத்திரங்களை வழங்குதல்: இலங்கை வாழ் விவசாயிகளுக்கு சலுகையை வழங்கும் முகமாக அரசாங்கம் செயற்படுத்திய காணிகள் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அரச காணிகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரண்பிம உறுதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை கீழே தரப்பட்டுள்ளது.

1. காணி உரிமையாளர் தனது காணிக்கான உறுதிப்பத்திரத்தைப் பெற்றுத் தருமாறு பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் கோரவேண்டும்.
2. பிரதேச செயலாளர் அலுவலகத்தின் உரிய அதிகாரிகள் கள ரீதியான சோதனையொன்றை மேற்கொண்டதன் பின்னர், குறித்த காணி உரிய விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தால் அந்தக் காணியின் எல்லைகளை அளந்து எல்லைக்கற்களை இட்டு காணிப்படம்ஒன்றைத் தயாரிக்குமாறு மாவட்ட நில அளவை அத்தியட்சகருக்கு நிலஅளவைக் கட்டளையொன்றை விடுப்பார்கள்.
3. அதற்கிணங்க நிலஅளவை அத்தியட்சகர் தயாரித்த காணிப்படம் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.
4. நிலஅளவை அலுவலகத்திலிருந்து காணிப்படம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் பிரதேச செயலாளர் சரியான முறையில் உறுதிப்பத்திரங்களைத் தயாரிப்பார்.
5. அந்த உறுதிப்பத்திரத்திரங்களுக்கு இலக்கங்கள் வழங்கப்படும். எனினும் சில மாகாணங்களில் அந்த இலக்கங்கங்கள் மாகாணக் காணிகள் ஆணையாளரினால் வழங்கப்படும்.
6. இவ்வாறு தயாரித்த உறுதிப்பத்திரங்கள் மாகாணக் காணி ஆணையாளருக்கு / காணிப் பிரதி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.
7. ஜனாதிபதியால் கையொப்பமிடப்பட்ட உறுதிப்பத்திரங்கள் மீண்டும் பிரதேச செயலாளருக்குக் கிடைக்கப் பெற்ற பின்னர் அந்த உறுதிப்பத்திரங்கள் காணிகள் பதிவு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
8. அந்த உறுதிப்பத்திரங்கள் காணிகள் பதிவுத் திணைக்களத்தில் பதியப்பட்ட பின்னர் அந்த உறுதிப்பத்திரங்கள் மீண்டும் பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.
9. பதிவுசெய்யப்பட்டு முடிந்த உறுதிப்பத்திரங்கள் உரிய சேவைக் கட்டண ங்கள் அறவிடப்பட்ட பின்னர் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்.

**➢ காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 வகையான காணி வழங்கப்படுகிறது.**

1. காணித்துண்டு எதுவுமற்றவர்களுக்கு காணி வழங்கல்.
2. அரச காணியில் ஆட்சியை கொண்டிருப்போருக்கு அக் காணியை வழங்கல்.

இவ் வகையான காணியை பெறுவதற்கான பொதுவான தகைமைகள்

➢ இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

➢ தனக்கோ தனது குடும்ப அங்கத்தவர்களுக்கோ குடியிருக்க இலங்கையில் எதுவித காணித்துண்டும் அற்றவராக இருத்தல் வேண்டும்.

➢ வருமானம் குறைந்த விவசாய வகுப்பினராக இருத்தல் வேண்டும்.

➢ 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் திருமணம் செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

➢ குறித்த பகுதியில் நிரந்தரமாக குடியிருத்தல் வேண்டும். (கட்டாயமன்று)

➢ ஏலவே அரச காணித்துண்டு ஒன்றினை பெறாதவராக இருத்தல் வேண்டும்.

➢ அரச காணியில் ஆட்சி கொண்டிருப்போராயின் 1995.06.15ஆம் திகதிக்கு முன்னர் காணியை ஆட்சி கொண்டிருத்தல் வேண்டும்.

**இவ் வகையான காணியை பெறுவதற்காக விண்ணப்பம் செய்யும் முறை**

➢ மேற்கூறப்பட்ட தகைமைகளையுடைய நபர் குறிப்பிட்ட காலத்தில் உரிய காணியற்றோர் படிவத்தை பூரணப்படுத்தி கிராம அலுவலரிடம் கையளித்தல் வேண்டும்.

➢ காணியற்றோர் படிவம் பிரதேச செயலகமூடாக சேகரிக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளரின் அனுமதியின் பின் காணிக் கச்சேரி நடத்தப்படும்.

**காணிக் கச்சேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

➢ அடையாள அட்டை.

➢ வதிவை உறுதிப்படுத்தும் ஆவணம். (உ-ம் :- தேருநர் இடாப்பினது பற்றுச் சீட்டு)

➢ விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தி வழங்கிய போது கிராம அலுவலரால் படிவம் பெற்றுக்கொண்டமைக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு.

➢ காணியில் ஆட்சி கொண்டிருப்போர் ஆட்சிக் காலத்தை நிருபணம் செய்வதற்கான ஆவணங்கள். (உ-ம்:- வாக்காளர் பதிவேடு , குடிநீர் பற்றுச்சீட்டு மின் இணைப்புப் பட்டியல், ஆதனவரி பற்றுச்சீட்டு, குறித்த விலாசத்திற்கான வங்கிப் புத்தகம் அல்லது திணைக்களங்களால் வழங்கப்பட்ட ஆவணங்கள் அல்லது கடவுச்சீட்டு).

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இனப்படுகொலை! சர்வதேச விசாரணை வேண்டும்

## அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை



(சென்னை)

எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நாடாளுமனற தேர்தலுக்கான அ.தி.மு.க தேர்தல் அறிக்கையை ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ளார்.

ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அக்கட்சியின் 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மேலும், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு மாதாந்தம் நேரடி உதவித் தொகையாக 1,500 ரூபாய் வழங்க வலியுறுத்தப்படும், வரட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல நீர் மேலாண்மை திட்டம், இளைஞர்களுக்கு இலவச திறன் மேம்பாட்டு பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

தனியார்துறை வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்ற வலியுறுத்தப்படும், கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும், நீட் தேர்வில் தமிழக மாணவர்களுக்கு விலக்களிக்க மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தும் என பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், தமிழகத்தின் 39 தொகுதிகளுக்கான நாடாளுமன்ற தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சமலின் விலகல் கடிதத்தை மூன்று மாதங்களுக்குப் பின் ஏற்றுக்கொண்ட மைத்திரி



(கொழும்பு)

அரசியலமைப்பு பேரவையிலிருந்து, விலகுவதாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அனுப்பிய கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பு பேரவைக்கு அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த அரசியலமைப்புப் பேரவையின் கூட்டத்தில் ஜனாதிபதியின் இந்த முடிவு அதிகாரபூர்வமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் இணைந்து, சமல் ராஜபக்ஷவை அரசியலமைப்புப் பேரவை உறுப்பினராக நியமிக்க பரிந்துரைத்திருந்தனர்.

எனினும், ஆட்சிக் குழப்பங்களுக்குப் பின்னர், மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராகி, அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரானதும், கடந்த ஜனவரி மாதம் பேரவையின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு, சமல் ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

எனினும், மூன்று மாதங்களுக்குப் பின்னரே இந்த பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொள்வதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந் நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து, அரசியலமைப்பு பேரவைக்கான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

முன்னதாக, இரா.சம்பந்தனை மீண்டும் அரசியலமைப்பு பேரவைக்கு நியமிக்க இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை சபாநாயகர் கரு ஜெயசூரியவின் தலைமையில் அரசியலமைப்பு பேரவையின் அடுத்த கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-7)

# கஞ்சாவுடன் கைதான இளைஞன் பொலிஸ் சார்ஜன் மீது தாக்குதல்

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதில் பொலிஸ் சார்ஜன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் குறித்த பிரதேசத்தில் உள்ள 26 வயதுடைய இளைஞன் ஒருவரை பொலிஸார் 2 கிராம் கஞ்சாவுடன் கைது செய்து அவரின் ஒரு கையில் விலங்கிட்டு விலங்கின் மறு பகுதியை பொலிஸ் சார்ஜன் தனது கையிலிட்டவாறு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட இளைஞனை பொலிஸ் நிலைய சிறைக்கூட்டில் அடைக்க முயன்றபோது இளைஞன் பொலிஸ் சார்ஜன் மீது விலங்குடன் முகத்தில் தாக்குதல் நடத்தி இருவரும் கட்டிப்பிடித்து அடிபட்டதில் பொலிஸ் சார்ஜன் படுகாயம் அடைந்ததையடுத்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)



யாழ்.கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை நிகழ்வுகள் கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

ஓய்வு பெற்ற யாழ். வலய உடற்பயிற்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளனின் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடி இளங் கலைஞர் மண்டபத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.நிமலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (136-10)

# காணி உறுதிப்பத்திரங்கள் கட்சி பேதமின்றி வழங்கல்

(கொழும்பு)



காணி உறுதிப்பத்திரங்களை கட்சி பேதமின்றி வழங்கி வருகின்றோம். அத்துடன் நாட்டின் சிறிய காணித்துண்டேனும் வெளி நாட்டவருக்கு உரித்துரிமை வழங்க அரசாங்கம் இடமளிக்கப் போவதில்லை என காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அத்துடன் காணிப்பிரச்சினைகளை தீர்க்க காலம் கடந்த சட்டங்களை நீக்கி புதிய சட்டத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். காணி அபிவிருத்தி சட்ட மூலத்தில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும். அதனை விரைவில் மேற்கொண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இந்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு, தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற மற்றும் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு; மீண்டும் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்ட சாரதி

(பொரளை)

பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியை விபத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் மீண்டும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

பம்லப்பிட்டியில் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி பொரளை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ஆனந்த சாகர சரத்சந்திர, டிபென்டர் ரக வாகனத்தில் மோதி படுகாயமடைந்து, சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், குறித்த டிபென்டர் ரக வாகனத்தின் சாரதி விபத்து இடம்பெற்ற தினத்தில் தப்பிச் சென்றிருந்த நிலையில், கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள நிலையில், சாரதி மீண்டும் கைதுசெய்யப்பட்டு மீண்டும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சாரதியை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, அடுத்த மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-7)

## இசையமைப்பாளர் ஜனநாத்துக்கு பிணை



(கொழும்பு)

விபத்து சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பிரபல இசையமைப்பாளர் ஜனநாத் வரகாகொட நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கிரில்லவெல பிரதேசத்தில் மஞ்சள்கடவையால் பாதையை கடக்க முற்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தில் அவர் கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவரே குறித்த விபத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கையே தனக்கு உதவி என்பவர்க்குத்தான் கடவுளும் உதவுகிறார்.
– ஃப்ராங்க்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மேற்பார்வை என்றால் என்ன? கால அவகாசம் என்றால் என்ன?

சிங்காரிதான் காவேரி. காவேரிதான் சிங்காரி என்றொரு சினிமாப் பாடல் உண்டு.

இரு நிலைத் தன்மையை ஒரு நிலைத் தன்மையாகக் கூறுகின்ற மரபு நம் தமிழ் மொழியில் இருப்பது கண்கூடு.

.... அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே என்ற திருமூலரின் பாடலில் அன்பும் சிவமும் ஒன்று என்பதாகக் கூறப்படுகிறது.

ஆக, இருநிலை வடிவங்களை ஒரு வடிவம் ஆக்குகின்ற வழமை நம் தமிழ் மொழியில் இருப்பது இதிலிருந்து உறுதியாகிறது.

ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இருவேறுபட்ட விடயங்களில் ஒன்றை நீக்கி இன்னொன்றை இரண்டுக்குமான பொது வடிவமாகக் காட்ட முற்படுகின்றார்.

அதாவது ஐ.நாவில் இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. மாறாக ஐ.நாவின் மேற்பார்வை நீடிக்கப்படுகிறது என்பதாக அவரின் கருத்து அமைந்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றாத நிலையில், ஏலவே இரண்டு ஆண்டு கால அவகாசத்தை இலங்கை பெற்றிருந்தது.

அந்த இரண்டு ஆண்டு கால அவகாசம் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிந்து விடுகிறது.

எனினும் ஐ.நா மனித உரிமை பேரவை விதித்த நிபந்தனை எதனையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

இந்நிலையில் தமக்கு இன்னொரு கால அவகாசம் வேண்டுமென இலங்கை அரசு கோரிக்கை முன்வைத்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், கால அவகாசம் வழங்கக்கூடாது என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் கோரிக்கை.

இதற்காக சர்வதேசத்தின் கவனயீர்ப்புக்கான போராட்டங்களையும் தமிழ் மக்கள் நடத்தி வருகின்றனர்.

இதேவேளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில், இலங்கை அரசு ஏமாற்றுகிறது.

எனவே சரியானதும் பொருத்தமானதுமான நடவடிக்கை தேவை என்பதாகத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறது.

எப்படியும் கால அவகாசம் பெற்றுத் தருவோம் என்று இலங்கை அரசுக்குச் சத்தியம் செய்து கொடுத்தவர்கள் போல கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்.

கால அவகாசம் வழங்கக்கூடாது என ஒட்டுமொத்தத் தமிழ்த் தரப்பும் கூற, இல்லை கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கூட்டமைப்புக் கூறுவதானது, கூட்டமைப்பின் அரசியலுக்கு ஆரோக்கியமானதல்ல என்ற நிலையில்;

இப்போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஐ.நா மனித உரிமை பேரவை வழங்குவது கால அவகாசமல்ல மாறாக ஐ.நாவின் மேற்பார்வையை நீடிப்பதாகும் எனக் கூறியுள்ளார்.

கால அவகாசம் என்பது கால அவகாசமல்ல. அது ஐ.நாவின் மேற்பார்வை. எனினும் மேற்பார்வை என்பது கால அவகாசம் எனத் தவறாகப் புரியப்பட்டுள்ளது என்பது அவரின் கருத்து விளக்கம்.

ஆக, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் மொழி வழியில் கூறுவதாயின்; இலங்கை அரசு ஐ.நாவிடம் கால அவகாசம் கோரவில்லை. மாறாக தங்களை ஐ.நா மேற்பார்வை செய்ய வேண்டும் என அரசு கேட்கிறது என்பது பொருளாகிறது.

நிலைமை எப்படியிருக்கிறது என்பது தமிழ் மக்களுக்கே வெளிச்சம்.

# காரைநகர் ஈழத்து சிதம்பரம் திண்ணபுரம் சிவன்கோவில் சோமாஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருள தேவர்கள் பூமாரி பொழிய நாமும் 'ஓம் நமசிவாய' என காதலாகிக் கசிந்து வாழ்த்துவோம்

**அழக லமரர் தலைவ**
**வுயிரினரச வருக**
**வருகவே**
**பழைய புலவர் பனுவ**
**னு க ரு ம் பரம வருக**
**வருகவே**
**அளவி லாத வடியர் பரு**
**கும் அமுத சலதி**
**வருகவே**
**குழகு குலவு தேரி வர்ந்து**
**குமரன் றாதைவருகவே**
*(ஈழத்துச் சிதம்பர புராணம்)*

அழகனே, தேவர்கள்தலைவ்னே, உயிர்களைப் பாதுகாத்து ஆளும் அரசனே, திருவீதியில் உலா வருக உலா வருக. பழந்தமிழ்ப் புலவர்கள் பாடிய பாடல்களின் இனிமையை நுகரும் பரம்பொருளேதிருவீதியில்உலாவருக. உலா வருக. எண்ணிறந்த அடியவர்கள் அள்ளிக் குடிக்கும் அருளாகியஅமுதக் கடலே உலா வருக. அழகு விளங்கும் தேரில் எழுந்தருளிக் குமரக் கடவுளின் தந்தையே உலா வருக.

பங்குனி உத்தரத்துப் பொருந்தியதிருவிழாநாளின் அலங்கரிக்கப்பட்ட தேரில் எழுந்தருளித் தமது அழகிய திருக்கோலத்தை அடியவர்களுக்கு காட்டியருள ஒரு நூறு ஆண்டு காலத்திற்கு மேலாக எவ்வித இடையூறுமின்றி நடத்துவதலுக்கு எம் பெருமான் விநாயகப் பெருமானுக்கு வணக்கம். கருப்பம் அடையாமல் எல்லா உலகங்களையும் பெற்றும் கன்னியாயிருப்பவரே, திருவீதியில் உலா வருக உலா வருக.

தேவர்களுக்கெல்லாம் மேலான தேவனும் ஆகிய சிவபெருமான் தன்னோடு அழகானவற்றுக்கெல்லாம் மேலான அழகுடைய உமையம்மையார் உலகம் நடைபெறும் பொருட்டு இப்பாகத்தில் பொருந்தி விளங்க, இளைய பிள்ளையாராகிய முருகப் பெருமான் இருவருக்கும் நடுவே பொருந்தி விளங்க எடுத்துக் கொண்ட அருள் வெளிப்பாடான சோமாஸ்கந்த வடிவம், அடியேங்களது கண்கள் குளிருமாறு தேரில் எழுந்தருளி, திருவீதியில் உலா வருக உலா வருக என்று சொல்லி அடியவர்கள் வாயார வாழ்த்தும் தோறும் அவர்களது கண்கள் தேரில் எழுந்தருளுகின்ற சோமாஸ் கந்தப்பெருமானின் திருக்கோலத்தில் பொருந்திய பேரழகையும் திருவருட்பொலிவையும் அனுபவித்துக் களிப்பினால் நிறைய, கைகள் குற்றமற்ற தலையின் மேல் "ஓம் நமசிவாய" சென்று குவிய தேர் வடத்தைப் பிடித்து இழுப்பவர்கள் செய்யும் சிவநாமத்தின் அழகிய ஓசை திசையிடத்தை அளக்க, பல வாத்தியங்களும் பெரிது முழங்கு, திருமுறைகள் ஓதும் ஓசையுடன் அழகிய பெரிய தேர் வீதி வலம்வந்துதிருவாயிலை அடைய அந்தச் சோமாஸ் கந்ததிருவுருவத்தில்பொருந்தி அநுக்கிரகம் புரிபவரான, சந்திரனைச் சூடிய சடையினையுடைய எண்குணத் திறைவனுக்கு வணக்கம். அந்தரி, சுந்தரி, அம்பிகை என்ற திருநாமங்களாற் போற்றப்படும் இறைவிக்கு வணக்கம். செந்தமிழின் இனிமையை முற்றாகஉண்டுசுவைத்த முருகப் பெருமானுக்கு வணக்கம்.



*க.கு.க. சிவபாலன்*
*போசகர்,*
*மாணிக்கவாசகர்*
*மடாலயம்*

## நெதர்லாந்தில் துப்பாக்கிச்சூடு; 3 பேர் பலி, 9 பேர் படுகாயம் சந்தேகநபர் கைது

(ஹேக்)

நெதர்லாந்து நாட்டின் உட்ரெச் நகரில் டிராம் வண்டியில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பலர் காயமடைந்த நிலையில் 3 பேர் பலியாகினர்.

நெதர்லாந்து நாட்டின் உட்ரெச் நகரில் நேற்று முன்தினம் காலை வேலைக்கு செல்ல டிராம் வாகனத்தில் பலர் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது டிராம் வாகனத்துக்குள் புகுந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக சுடத் தொடங்கினார். அதன் பின் அங்கிருந்து தப்பிச் சென்றார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்த துப்பாக்கிச்சூட்டில் ஏராளமானோர் காயம் அடைந்துள்ளனர். தகவலறிந்து வந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இந்தத் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்ததாகவும் 9 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் 3 பேரின் நிலைமை ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

## மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, காங்கேசன்துறை கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமா னப் படை ஓய்வுகால விடுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** வட்டக்கச்சி, இராமநாதபுரம், பன்னன் கண்டி, Aquaculture Development வட்டக் கச்சி, SLAF Camp I இரணைமடு, SLAF Camp II இரணைமடு, Agricul ture training Centre வட்டக் கச்சி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## பொள்ளாச்சி பாலியல் விவகாரம்; தமிழகம் முழுவதும் கடையடைப்பு பொலிஸார் குவிப்பால் பதற்றம்

(பொள்ளாச்சி)

தமிழகத்தையே உலுக்கிய பொள்ளாச்சி பெண்கள் பாலியல் கொடூர வழக்கில குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கக்கோரி நேற்று கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.

இதன் காரணமாக அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பதற்றம் காரணமாக குறித்த பகுதியில் சுமார் 700க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொள்ளாச்சி பெண்கள் பாலியல் கொடூர வழக்கு விசாரணையை உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பில் நடத்தக்கோரி இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு பேரையும் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## சீனாவில் நிலச்சரிவு உயிரிழப்பு 15 ஆக உயர்வு

(பீஜிங்)

வடக்கு சீனாவின் ஷான்சி மாகாணத்தில் கட்டடம் இடிந்து விழுந்து ஏற்பட்ட அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக உயர்வடைந்துள்ளது. ஐந்து பேர் காணாமல் போயுள்ள நிலையில், 13 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்றும் மீட்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. (7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### பேசுவதால் பயனேதும் இல்லை

✦ வயலில் தூவப்படும் சில விதைகளே, பல ஆயிரம் மடங்காக பயிர்களை திருப்பித்தரும். அதைப்போலவே ஒருவர் செய்யும் நன்மையும், தீமையும் பல மடங்காக பெருகி அவரிடமே வந்து சேரும். ஆகவே, எப்போதும் நன்மை செய்பவர்களாகவே இருங்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகள் சரியாக இல்லாவிட்டாலும்கூட, நன்மை செய்வதிலிருந்து தவறாதீர்கள். இவ்வாறு செயற்படுபவர்களுக்கே விரைவில் இறைவன் அருள் கிடைக்கும்.

✦ சிலர் தேவையே இல்லாமல் பேசிக்கொண்டிருப்பார்கள். எதற்காக பேசுகிறோம், எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பேசுகிறோம் என்ற வரையறையே இல்லாமல் பேசுவதால் பேசுபவருக்கோ, பேச்சை கேட்பவருக்கோ எந்த நன்மையும் உண்டாகப் போவதில்லை. ஆகவே, அமைதியாகவே இருங்கள்.

✦ நெருப்பு எரியும் இடத்தில் இருந்து புகை கிளம்பிக் கொண்டிருக்கும். நெருப்பினால் நமக்கு தேவையானவற்றை சூடுபடுத்திக் கொள்ளலாம் அல்லது பிற தேவைகளுக்கு பயன்படுத்தலாம். ஆனால், புகையால் பயன் ஏதும் இல்லை. புகையை நிறுத்த வேண்டுமானால் நெருப்பை அணைக்க வேண்டும். நெருப்பு என்ற பற்றினை அணைத்து விட்டால், புகை என்ற காரியமானது தாமாகவே அழிந்து விடுகிறது.

✦ ஆசை அழிக்கும் குணமுடையது. அன்பு வளர்க்கும் குணத்தை உடையது. நீங்கள் வளர்க்கும் குணமுடையவர்களாக இருங்கள். வீணான ஆசைகளால் துன்பம் நேருமே தவிர நன்மை எதுவும் உண்டாகி விடாது என்பதால் ஆசையை அழித்து விடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறை கலைவாணி அணியின் சுப்பர் - 8 ஆட்ட முடிவுகள்

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

முதற்சுற்று, இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நிறைவு பெற்று, தற்போது சுப்பர் - 8 அணிகளுக்கிடையிலான லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

நாவற்குழி அன்னை அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில், இளவாலை யங்ஹென்றிஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஊரெழு றோயல் அணிக்கும் குருநகர் பாடும்மீன் அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆனைக்கோட்டை யூனியன் அணிக்கும் நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில், ஆனைக்கோட்டை யூனியன் அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி பலமான சென்.மேரிஸ் அணியை, 05:00 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தியது.

குருநகர் பாடும்மீன் அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில், போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்காமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க-26)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# நாமகள் இளைஞர் அணி சம்பியன்





தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகத்திற்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வலைப்பந்தாட்டப் போட்டி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் நாமகள் இளைஞர் கழகமும் பன்னாலை கணேசன் இளைஞர் கழகமும் மோதின. விறுவிறுப்பான இப்போட்டியில் நாமகள் இளைஞர் கழகம் முதலாம் இடத்தையும் பன்னாலை கணேசன் இளைஞர் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. (க-105)

# கப்டன் சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணம் யாழ்.சென்றல் அணிக்கு முதலாவது வெற்றி



கப்டன் சோமசுந்தரம் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 6 ஆவது போட்டியில் யாழ்.சென்றல் அணி, ஏபி அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஏபி அணி 18 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஞானா-19, விஷ்ணு-16, ஆதி-12, உத்தமன்-24, சிலோஜன்-10, கஜீபராஜ்-12, லிங்கநாதன்-10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சலிஸ்ரன்-4, கரிகரன், கிரிசாந்தன் தலா 2 இலக்குகளையும் றஜீவ்குமார், தீபன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 16 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. மில்லர்-11, ரஜீவ்குமார்-22, நிரோஜன்-14, சலிஸ்ரன்-16, கிரிசாந்தன்-45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிங்கநாதன்-2, ராகுலன்-2, சிலோஜன்-1 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 10 வருடங்களாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (Rating) யாழ். சென்றல் அணி 4.83 புள்ளிகளையும் ஏபி அணி 1.79 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# ரி.சி.சி.அணிக்கு முதலாவது வெற்றி



கப்டன் சோமசுந்தரம் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 7 ஆவது தகுதிகாண் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது ரி.சி.சி.அணி, விக்டோறி அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 20 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. கணேஸ்-11, பிரணவன்-40, சரத்குமார்-15, சின்துசன்-25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தீபநாதன்-3, சிவராஜ்-2, சுரேஸ், சுரேந்திரன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி. அணி 16.1 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றனர். தர்சிகன்-15, லவகான்-46, பிரபுவன்-39, சிவாஜ் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜங்கரன்-1 இலக்கினைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010ஆம்ஆண்டுதொடக்கம்தொடர்ந்து 10 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் ரி.சி.சி. அணி 4.84 புள்ளிகளையும் விக்டோறி அணி 1.73 புள்ளிகளையும்பெற்றுக்கொண்டன. (க)

# வேம்படி மகளிர் அணியை வென்று அச்சுவேலி புனித தெரேசாள் அணி சம்பியன்



யாழ் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட பெண்களிற்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி 9:4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

அச்சுவேலி பூனித தெரேசாள் மகளிர் அணி காலிறுதியாட்டத்தில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணியை 11:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் அரையிறுதியாட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியை 9:8 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின்...

மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய நீதியரசர் விக்னேஸ்வரன் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

கேள்வி : இன்றைய (நேற்று) இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள நீங்கள் வந்தது எதற்காக?

பதில்: கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு எமது மக்கள் மேற்கொண்டிருக்கும் இந்தப் போராட்டமானது மிகவும் முக்கியமானது. புதிய பரிமாணமும் உத்வேகமும் கூர்மையும் அடைந்துவரும் தமிழ் மக்களின் உரிமைக்கும் நீதிக்குமான அரசியல் போராட்டத்தில் காத்திரமான பங்களிப்பை வழங்கும் வகையில் இந்த போராட்டம் அமைந்திருக்கின்றது.

இந்த போராட்டத்தினூடாக வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்தி இருக்கின்ற செய்தி தீவிர கவனத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலே 2019 ஆண்டுக்கான முதலாவது கூட்டத்தொடர் நடைபெற்று வரும் இந்த வேளையில் எமது மக்கள் பல்வேறு ஏமாற்றுக்கள், ஏமாற்றங்கள், சூழ்ச்சிகள், அடக்குமுறைகள், உதாசீனங்கள், அவமானங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் ஓர்மத்துடன் வடக்கு கிழக்கில் மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான இந்த போராட்டங்களையும் அவர்களின் கோரிக்கைகளையும் ஐ.நா, சர்வதேச நாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவை அலட்சியம் செய்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

படித்த மக்கள் முதல் பாமர மக்கள் வரை எல்லோரும் ஒன்றாக இணைந்து தாமாகவே இந்தப் போராட்டங்களை எந்த அரசியல் கட்சிகளினதும் பின்னணி எதுவும் இன்றி மேற்கொண்டுவருவதன் தார்ப்பரியத்தை அலட்சியம் செய்யாமல் அதனைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யவேண்டும்.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றப் போகும் நேர்மை மற்றும் பற்றுறுதி ஆகியவை குறித்து எமது மக்களுக்கு அன்று நம்பிக்கை இல்லாத போதிலும் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஈடுபாடு காரணமாகவும் அந்த நாடுகள் வெளிப்படுத்திய நம்பிக்கை காரணமாகவும் எமது மக்கள் இதுவரை காலமும் நம்பிக்கையுடன் பொறுமையாக இருந்தார்கள்.

ஆனால், அந்தப் பிரேரணையில் கூறப்பட்ட போர்க்குற்ற விசாரணை உட்பட பல விடயங்களை அமுல்படுத்தப்போவதில்லை என்று ஜனாதிபதியும் பிரதமரும் வெளிப்படையாகத் தெரிவித்த பின்னரும் கூட எதற்காக அந்தத் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் மீண்டும் கொடுக்கப்படவேண்டும் என்று எமது மக்கள் கேள்வி எழுப்பும் நியாயத்தை இந்த நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும்.

அதனால்தான் சர்வதேச சட்டத்தின் பிரகாரம், மாற்று வழிகளை மேற்கொள்வது குறித்து ஐ. நா. மனித உரிமைகள் சபை அதன் உறுப்பு நாடுகள் ஆகியவை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எமது மக்கள் கேட்கின்றார்கள்.

இலங்கையை ஐ.நா பாதுகாப்பு சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தவேண்டும் என்றும் அதே சமயம் ஐ.நா மனித உரிமைகள் சபை இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் கோருவதில் அர்த்தம் இருக்கின்றது.

எமது மக்களின் இந்தக் கோரிக்கைகளை ஐ.நா மற்றும் சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருவதுடன் ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் சில தினங்களுக்கு முன்னர் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த ஆவன செய்யவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றேன் என்றார். (ம-3)

## ஜெனிவா பிரேர...

சுரேன் ராகவன் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர் நேற்று சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விருந்துபசாரம் ஒன்றை வழங்கினர். இதன்போதே பிரேரணையை திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3)

## நெடுந்தீவில் காற்...

ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு அண்மையில் மேற்பார்வை பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார்.

அதில் முதற்கட்டமாக அங்கு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான கேள்வி கோரல் விரைவில் அறிவிக்கப்படும் என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார். (ம-3)

## இணை அனுசர...

விலகவிடக் கூடாதென கோரிக்கை விடுத்ததாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் உறுப்பு நாடுகளுடன் ஒரு சந்திப்பு இடம்பெற்றதாகவும், இதன்போது மேற்குறித்த விடயத்தையே மீண்டும் வலியுறுத்தியதாக சுமந்திரன் கூறினார்.

இவ்விடயத்தில் ஏற்கெனவே வெளியிடப்பட்ட தீர்மான வரைபை இலங்கை மீறாமல் பார்த்துக்கொள்வது தமது கடமை என உறுப்பு நாடுகள் வாக்குறுதி வழங்கியதாக அவர் மேலும் கூறினார்.

இலங்கை தொடர்பான அறிக்கையை இன்று ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகர் சமர்ப்பிக்கவுள்ளதுடன் அன்றையதினமே இலங்கை விவகாரம் பேசப்பட்டு, அதன் பின்னர் நாளை தீர்மானம் நிறைவேற்றப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சர்வதேச விசார...

கில் மக்கள் எழுச்சிப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இதன் போது கல்லடி பாலத்தில் இருந்து மக்கள் எழுச்சிப் பேரணி ஆரம்பமாகி பின்னர் ரயில் நிலைய வீதி ஊடாக கடந்து காந்தி பூங்கா வரை சென்றடைந்தது.

தொடர்ந்து அங்கு ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மக்கள் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அதிகளவான பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் என்பன பூட்டப்பட்டிருந்தன. எனினும் பொது போக்குவரத்து வழமை போன்று இயங்கியதை காண முடிந்தது. ஆனால் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் வழமை போன்று இயல்பு நிலையில் இயங்கியதுடன் பொது நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. (ம-3)

## இலங்கைப் பிரேர...

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புகூறல் செயற்பாடுகள் தொடர்பில் பிரித்தானியா, ஜேர்மன் உள்ளிட்ட 5 நாடுகளின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட பிரேரணை ஐக்கிய நாடுகளின் 40வது மனித உரிமைகள் மாநாட்டில் இன்று விவாதிக்கப்படவுள்ளது.

நல்லிணக்கம், பொறுப்புகூறல், மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை பின்பற்ற வேண்டிய எதிர்கால செயற்பாடுகள் குறித்து அந்த பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்த பிரேரணையை கனடா, ஜேர்மன், மெசிடேனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகியவற்றுடன் இணைந்து பிரித்தானியா முன்வைக்கிறது.

2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முன்வைக்க அந்த குழு ஒன்றிணைந்தது.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மற்றும் 2017 மார்ச் மாதம் முன்வைத்த பிரேரணை மூலம் இலங்கை அரசாங்கம் இணங்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கான அவகாச காலம் நீடிக்கப்படவுள்ளது.

4 பிரதான விடயங்களை உள்ளடக்கிய பிரேரணை மூலம் 30/1 யோசனையின் கீழ் இலங்கை அரசாங்கம் இணங்கிய மற்றும் இதுவரை நடைமுறைப்படுத்த தவறிய விடயங்களை அமுல்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள், மறுசீரமைப்பு, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியன தொடர்பில் வழங்கக் கூடிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை வழங்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தொடர்ச்சியாக முன்னேற்றங்களை ஆராய்ந்து அது குறித்த எழுத்துமூல இடைக்கால அறிக்கையை 43வது அமர்விலும் முழுமையான அறிக்கையை 46வது அமர்விலும் சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கின் சாதிப்...

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் வடக்கில் நிலவி வரும் சாதிப் பிரச்சினை பெரும் தடையாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நாயகத்துடன் தாம் கலந்துரையாடியதாகத் தெரிவித்துள்ளார்.

நான்கு ஆண்டு காலப் பகுதியில் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட விதம் பற்றி திருப்தியா என ஆணையாளர் நாயகம் கேள்வி எழுப்பியதாகத் தெரிவித்துள்ளார்.

இதன்போது 50 வீதம் திருப்தி அடைவதாக தாம் பதிலளித்தாகவும் வடக்கில் நிலவி வரும் சாதி முறைமை தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பிரதான முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது என தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(ம-3)

## சர்வதேச நீதிமன்...

கட்சிகளினால் கைச்சாத்திடப்பட்ட மகஜரே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்லப்படவேண்டும், சர்வதேச தீர்ப்பாயம் ஒன்று நியமிக்கப்படவேண்டும், 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்கள் அமுல்படுத்தப்படுவதை கண்காணிக்க ஐ.நா ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன் அவர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்கவேண்டும் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஜெனிவாவில் ஓர...

சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்திவருகின்றனர்.

இந்த நிலையிலேயே ஜெனிவா விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று செயற்படாமல் ஒற்றுமையாக செயற்படவேண்டும் என்ற இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.(ம-3)

## கிளிநொச்சி, மன்...

வவுனியா வழமை போல இயங்கின. யாழில் நேற்று அரைகுறையாக போராட்டம் நடைபெற்றது.

கிழக்கில் நேற்று நடைபெற்ற போராட்டத்திற்கு வடக்கின் சில இடங்களில் கடையடைப்பு இடம்பெற்றுள்ளது. எனினும், குழப்பமான செய்தியால் வடக்கில் தடுமாற்றமான நிலைமையே காணப்பட்டது. வடக்கின் சில பிரதேசங்களில் கதவடைப்பு இடம்பெற்றது. சில பகுதிகளில் இடம்பெறவில்லை.

கிளிநொச்சியில் நேற்று பாடசாலைகள் இயங்குகின. எனினும் மாணவர் வரவு குறைவாக காணப்பட்டது. அதேவேளை, கிளிநொச்சி நகரத்தில் கதவடைப்பு இடம்பெற்றது.

முல்லைத்தீவில் அனைத்து செயற்பாடும் வழமைபோல இடம்பெற்றது. பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் இயங்கின அங்கு கதவடைப்பு இடம்பெறவில்லை.

வவுனியாவில் அனைத்தும் வழக்கமாக இயங்குகின. பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் வழக்கம் போல இயங்கின.

மன்னாரில் கடைகள் அடைக்கப்பட்டது. பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிக குறைவாக காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் காலையில் கதவடைப்பு இடம்பெற்றது. எனினும், பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர் வரவு மிக வீழ்ச்சியடைந்திருந்தது. சில பாடசாலைகள் இயங்கவில்லை. சில இடங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஏனைய இடங்களில் இயல்புநிலை காணப்பட்டது.(ம-3)

# இலங்கை அரசின் வன்முறையாலேயே தமிழர் ஆயுதத்தை கையிலெடுத்தனர்

## ஐ.நாவில் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

இலங்கை அரசானது வன்முறையை கையிலெடுத்த போது அதற்கான எதிர்வினையாக தமிழர் தரப்பும் ஆயுதத்தை கையில் எடுக்க நேர்ந்தது என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதான அவையில் இடம்பெற்ற பொது விவாதத்தில் விடயம் 8இல் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு நிற்கும் தமிழ்த் தேசமானது ஒருபோதும் பாராதீனப்படுத்தபடமுடியாத தம் சுயநிர்ணய உரிமையை அடைவதற்காக இலங்கையில் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கிறது.

இலங்கை அரசானது வன்முறையை கையிலெடுத்தபோது அதற்கான எதிர்வினையாக தமிழர் தரப்பும் ஆயுதத்தை கையில் எடுக்கநேர்ந்தது.

ஆனால் அதேவேளை, தமிழ் விடுதலை அமைப்பினை மட்டுமின்றி, தனது பார்வையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியவர்கள் என கருதப்படும் தனி நபர்கள் மற்றும் அமைப்புகள் என அனைவரையும் இலங்கை அரசானது தனது இலக்காக கருதியது.

சுயநிர்ணய உரிமையை வெறுமனே ஒரு குறியீட்டுப்பொருளாக மட்டும் ஐக்கிய நாடுகளும் இந்த அவையும் தொடர்ந்தும் அணுகுமேயானால், சுயநிர்ணய உரிமைக்காக உண்மையில் போராடிக்கொண்டிருக்கின்ற அனைவரும் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுவார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன் என தெரிவித்துள்ளார்.(ம-3)

மஹஜன சம்பத
திகதி 2019/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 3879
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 0 0 6 7 7

கொவிசெத
திகதி 2019.03.19
சீட்டிழுப்பு இலக்கம் 2068
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 05 53 59 71

நீரோகா
திகதி 2019/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 526
சிம்மம் 17 31 34 41 24

செவன
திகதி 2019/03/19
சீட்டிழுப்பு இலக்கம் 171
ஆங்கில எழுத்து A
வெல்லப்பட்ட இலக்கங்கள் 30 34 47 63

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்து வேலைவாய்ப்பு

மேசன் - ரைல் பொருத்துநர் - பிளம்பர் - காப்பென்ரர்
மெக்கானிக் - மோட்டார் சைக்கிள் மெக்கானிக்
படகு கட்டுமான பணியாளர் - வளவள பணியாளர்கள்
அலுமினியம் பிற்றர் - தொழிற்சாலை மின்னியலாளர்

5 வருட தொழில் அனுபவம் - வயதெல்லை 46
அடிப்படை ஆங்கில தொடர்பாடல் திறன் அவசியமானது

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

**Emerald Isle**
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

077 00 38 215
021 2219 221

221-1/1. மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

(C-5791)

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-5806)

## பணியாளர்கள் தேவை

"வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு" யாழ், மானிப்பாய் பகுதிகளில் CCTV கண்காணிப்பாளர், அலுவலக முகாமையாளர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் முழுமையாக மற்றும் பகுதி நேரமாக சேவையாற்ற பணியாளர்கள் தேவை.

**தொடர்புகளுக்கு : 076 989 9977**

(8044)

## WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
**SRI MURUGAN**
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(C-5809)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## 3வது ஆண்டு நினைவலைகள்



அமரர்
வைத்திய கலாநிதி
**இராஜசிங்கம் தெய்வேந்திரன்**

தோற்றம்: 26.01.1939 மறைவு 23.03.2016
திதி : 20.03.2019

அன்பின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
கடமையில் கண்ணாய்
மருத்துவத்தில் மகத்துவமாய்
சீர்பெற்று வாழ்ந்திட்டீர்!
எமக்கு ஆற்றொணாத் துயர்தந்து
ஆண்டவனிடம் சென்றீரே!
தேற்றொணா மொழி கொண்டு
தேம்புகின்றோம் நாம்!

நெஞ்சம் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
இல.80, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(8030)


## பதவி வெற்றிடம்

நீங்கள் O/L, A/L படித்தவர்களா?
உங்களுக்கான தொழில் துறையைத் தேர்ந்தெடுப்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பத்தை எமது நிறுவனம் உங்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளது. இன்றே எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்கான துறையை நீங்களே தீர்மானித்து கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு : 077 408 3273**

(8046)

## ஆங்கில வழிகாட்டல்

**ILTS** ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு, மற்றும் **Spoken, Grammer** அத்துடன் வெளிநாடுகளுக்கு செல்வோர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், அரச தொழில் புரிவோர்களுக்கு ஆங்கில வகுப்பு மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

**(வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்)**

**தொடர்புகளுக்கு : 070 463 9099**

(8039)

## ஆண், பெண் இருபாலாருக்குமான நிரந்தர வேலைவாய்ப்பு

**சாதிக்க துடிக்கும் இளைஞர் யுவதிகளுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்**

தமிழ் பேசும் மக்களுக்கான வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்குடன் எமது நிறுவனத்தின் புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**இக் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகிறது**

முகாமையாளர் (A/L, மேலதிக கல்வி)
உப முகாமையாளர் (O/L, A/L)
மேற்பார்வையாளர் (10, O/L கல்வி கற்றவர்கள்)
விநியோகஸ்தர் (10, O/L படித்தவர்கள்)

பயிற்சியின் போது ரூபாய் 15,000 - 20,000 முதல் பயிற்சியின் பின் 50,000 + மேலதிக கொடுப்பனவுகளும் பெற்றுக்கொள்ள முடியும்.

**குறிப்பு :** தங்குமிட வசதி உண்டு
வெளிநாட்டு சுற்றுலா வசதி செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு : 0765233519, 0762121409**

(8047)

## Vacancy

**EML** கம்பனியில் 6 புதிய வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 18 வயது தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்டவராயின் நீங்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரியின் கல்வித் தகைமை எதிர்பார்க்கப்படவில்லை.

- முதலில் தெரிவின் மூலம் தெரிவு செய்யப்படும் 25 நபர்கள் மட்டுமே நிறுவனத்தில் வேலை வாய்ப்பிற்குள் உள்வாங்கப்படுவர்.
- சம்பள அளவுத்திட்டம் - 17,250 தொடக்கம் 50,000 வரை
- விண்ணப்ப முடிவுத்திகதி - 27.03.2019
- நேர்முகத் தேர்வானது வியாழக்கிழமை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். **தொடர்புகளுக்கு : 0771440786, 0768387442**

(8045)

## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

**அண்ணா பொதிகள் சேவை**

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(C-5807)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## போட்டிப் பரீட்சைகளுக்கான மாலைநேர வகுப்புக்கள்

ஆரம்பம் :
வியாழன் (21/3)
பி.ப 5.00 – 7.00

**பொது உளச்சார்பு**

நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர், பதிவாளர் மற்றும் SLAS, SLEAS உட்பட அனைத்து பரீட்சைக்கும் செவ்வாய், புதன், வியாழன் பி.ப. 5.00 - 7.00

**0766883394**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ் நகர்

(C-5824)


## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்



### மணவாளக் கோலத் திருவிழா

காலம் :- 21.03.2019 வியாழக்கிழமை மு.ப 7.30 மணிமுதல் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகம், பூசைகளும் இடம்பெற்று அம்பாள் எழுந்தருளி உள், வெளி வீதி உலாவந்து அருள் பாலிப்பார். தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும்.

**— பரிபாலன சபை**

(8042)




யாழ் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கிலப் பாடநெறி ஆரம்பம்

**DIPLOMA IN ENGLISH (Spoken English)**
(06 மாதங்கள்)

**ஆரம்பம் : 23.03.2019 மதியம் 12.30 மணி**
(வார இறுதி நாட்களில் சனி, ஞாயிறு தினங்களில் மதியம் **12.30 - 3.00** வரை நடைபெறும் பாடநெறி)

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் ஒரே தெரிவு

**E-CITY**
**COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகில்)
021 221 7106 / 077 340 0418 /
077 061 5242 / 077 492 4166
web: www.ecitycollege.lk

(8034)


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் அரும்பணி யாற்றி வந்தவரும் பழைய மாணவியுமாகிய

திருமதி
**கார்த்திகாயினி (கீதா) விக்னேஸ்வரன்**

அவர்கள் கனடாவில் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யூனியன் கல்லூரிச் சமூகம்
தெல்லிப்பழை.

(C-5822)


*விற்பனையாகியது...*

**2019 தரம் - 5**

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு

**விவேக நுண்ணறிவு வழிகாட்டி**

(நுண்ணறிவு வினாக்களும் விடைகளும்)

ஆசிரியர் எஸ் ஜெயக்குமார்
திருக்கோவில்

விலை 525/-

வெளியீடு
**யுனிலங்காஸ் பப்ளிகேஷன்**
இல. 10-1/5, (342 , Trust Complex ,Sea Street)
முதலாம் மாடி, ஜிந்துபிட்டி வீதி, கொழும்பு -13.
தொ.பே : 077 6258778

(C-5818)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] இலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org